T-UN-423

# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 64 மலர் 6

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — புரட்டாசி மலர் : 6

செப்டம்பர் — அக்டோபர் — 1990

**உள்ளுறை** **பக்கம்**

1. சேலம் மாவட்டத்தில் அருந்ததியினர் மட்டும் வழிபடும் அரிய நடுகற்கள் .... 242
ச. கிருஷ்ணமூர்த்தி, எம் , ஏ., பி. எட்.

2. சிலம்பு காட்டும் குடும்ப அமைப்பு .... 247
முனைவர் தா. ஈஸ்வரபிள்ளை,

3. தமிழில் வட்டார நாவல்கள் ... 255
இரா. பாலசுப்பிரமணியன்.

4. இலக்கிய இன்பம் .... 259
இரா. முரளி.

5. சிலப்பதிகாரத்தில் அறமுழக்கம் .... 264

6. அறுவகை இலக்கணத்தில் எழுத்திலக்கணக் கோட்பாடுகள் .... 278
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

7. திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு .... 283
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., எம்ஃபில்.

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

# தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ, பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை. பி ஏ.
முன்னாள் அரசு துணைச் செயலாளர் சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம் ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன். எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர்.த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

# சேலம் மாவட்டத்தில் அருந்ததியினர் மட்டும் வழிபடும் அரிய நடுகற்கள்

ச. கிருஷ்ணமூர்த்தி, M. A., B. Ed.,

நடுகல் வழிபாடு சங்க காலந்தொடங்கி இன்று வரை கிராம மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. மேட்டுக் குடியினராகத் தம்மைக் கருதிக் கொள்ளும் சில பிரிவினர் தவிர எல்லோரும் நடுகற்களைப் புனிதமாகவே கருதுகின்றனர். சில குறிப்பிட்ட நடுகற்களைக் குறிப்பிட்ட சில சாதியார் மட்டுமே வழிபடும் போக்கும் ஊர்களில் உள்ளன. சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் கேதுநாய்க்கன்பட்டி புதூர்சக்கிலிச்சி ஏரியில் உள்ள மதகுக்கல்வெட்டுகளையும் நடுகற்களையும் அருந்ததியினர் மட்டுமே வழிபடுகின்றனர். அரிய அந் நடுகற்கள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**மதகுக் கல்வெட்டு :**

கே. என். புதூர் சக்கிலிச்சி ஏரியில் ஒரே செய்தியைக் கூறும் இரண்டு வட்டெழுத்து மதகுக் கல்வெட்டுகள் உள்ளன. கி. பி 1977 இல் கொடுமுடி சண்முகம் மேற்படி கல்வெட்டு களைக் கண்டுபிடித்தார்.

> " ஸ்ரீகிடங்கில் புலியார் மகன் நல்லி பி
> ஒட்டைக் கண்டது "

என்பது கல்வெட்டின் வாசகமாகும். இரண்டு வட்டெழுத்து மதகுக் கல்வெட்டுகளையும் பெரிய செம்பம்மா, சிறிய செம்பம்மா என்று கூறி அருந்ததியினர் வழிபடுகின்றனர்.

**நடுகற்கள் :**

பல ஆண்டுகளுக்கு முன் இதே ஏரியில் மதுரைவீரன் பெயரில் சில நடுகற்களை அருந்ததியினர் வழிபட்டிருந்தனர். ஏரியில் நீர் நிரம்பி, சேற்றில் நடுகற்கள் புதையுண்டபின் அருந்ததியினர் மதகுக் கல்வெட்டுகளை மட்டும் வழிபட்டு வந்திருக்கின்றனர். 1987 ஆம் ஆண்டு நீரில்லாத போது மதகுக்கல்வெட்டுகளை வழிபட, விழா எடுக்க ஏரியைத் தோண்டியபோது மண்ணில் புதைந்திருந்த நடுகற்கள் வெளிப்பட்டன. செல்வராசு என்ற இளைஞர் நடுகற்கள் குறித்து எனக்குத் தகவல் தர மேற்படி இடத்திற்குச் சென்று ஆய்வு செய்த போது இரு நடுகற்களைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தமிழக

வரலாற்றிற்குக் குறிப்பாகச் சேலம் வரலாற்றிற்கு இந்நடுகற்கள் மிக முக்கியமானவை ஆகும்.

**பொன்னந்தியார் :**

முதல் நடுகல்லில் வீரன் கைகளில் கத்தியும் கேடயமும் ஏந்தி உள்ளான். போரிடும் தோற்றத்தில் வீரன் காட்டப் பட்டுள்ளான். வீரனுக்கு வலப்பக்கம் 9 வரி கல்வெட்டு உள்ளது.

1) இரண்டாவது தா
2) யனூர் நாடாளப் பொன்னந்
3) தியார் சேவகரு தாயனூ ராள்
4) வார் கொங்கிளவரைசரும
5) க்கள் பொற்சாத்தனார் தா
6) யனூர் மேல் வந்த ஞான்று
7) எறிந்து தொறு மீட்டுப்
8) பட்டான் வழுதியர் ம
9) (க)ன் பத்திரன் கல்

**வழுதியர் :**

கொங்கிளவரசர் மக்கள், பொற்சாத்தனார் தாயனூர் மேல் வந்த போது, தாயனூர் நாட்டையாண்ட பொன்னந்தியார் சேவகர், எதிரியுடன் தொறு மீட்புப் போரில் பங்கு கொண்டார். அப்போரில் வழுதியர் மகன் பத்திரன் இறந்து பட்டான். அவனுக்காக எடுக்கப்பட்டதே இந்நடுகல்லாகும். பொன்னந்தியார் தாயனூர் நாட்டையாண்ட குறுநில மன்னர் எனலாம். இவருடைய சேவகராக வழுதியர் மகன் பத்திரன் இருந்துள்ளான். வழுதியர் என்ற பெயர் பாண்டியரை நினைவு படுத்துகிறது. இந்த நடுகல்லை வழிபடும் அருந்ததியினர் 'மதுரை வீரன்' எனக் குறிப்பிட்டது ஒரு வகையில் பொருத்தமாகவே உள்ளது. தொறு கவர வந்த அரசர் கொங்கிளவரசர் மக்கள் பொற்சாத்தனார் ஆவார். கால்நடை களுக்கும் கொங்கு நாட்டிற்கும் மிகுந்த தொடர்பிருந்ததைச் சங்க நூற்களும் குறிப்பிடும். தாயனூர் நாடு பல்லவர் காலந்தொடங்கி நொளம்பர் காலம் வரை 7 நாடுகளில் ஒன்றாக இருந்துள்ளது. கல்வெட்டு உள்ள ஊர் பழங்காலத் தில் கங்கநாடு அல்லது தகடூர் நாட்டுடன் நெருங்கிய

தொடர்புடையது. கல்வெட்டில் வரும் எழுத்தமைதி கி.பி. 9 ஆம் நூற்றாண்டு ஆகும்.

## பொன் :

பொன்னந்தியார் பொற்சாத்தனார் பெயர்களில் வரும்பொன். செல்வச் செழிப்பைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பல நடுகற்களில் பொன் என்ற முன்னொட்டு பயின்று வந்துள்ளது. மாடு என்ற பொருளும் பொன்னுக்குண்டு. நந்தி என்ற சொல் பல்லவர் பெயருடன் தொடர்பு படுத்தலாம். சாத்தனார் என்ற பெயர் நடுகல்லில் வருகிறது. மக்களுச்குப் பொதுவாக வழங்கும் பெயராக சாத்தன் இருந்ததாலேயே இலக்கண உரையாசிரியர்களும் இப்பெயரை எடுத்தாண்டுள்ளனர். பத்திரன் என்ற சொல்லும் 'பாணபத்திரன்' என்ற சொல் போல உள்ளது.

## தொரைப்பாடி நடுகல் :

தாயனூர் நாட்டை கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பொன்னந்தியார் ஆண்டுள்ளார். செங்கம் வட்டம் தொரைப் பாடி வேடியப்பன் கோயில் நடுகல்லிலும் இதே பொன்னந்தியார் வருகிறார். அக்கல்வெட்டில் கங்கரை சரு மக்கள் பொன்னந்தியார் என்று உள்ளது. முதல் மகேந்திரவர்மனுடைய இரண்டாம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. ஆறாம் நூற்றாண்டில் (கி.பி, 577 இல்) பொன்னந்தியார் பெருமுகை மீது போர் தொடுத்துள்ளார். போரில் குன்றக்கண்ணியார் மாண்டுள்ளார். தொரைப்பாடி நடுகல்லில் பொன்னந்தியார் எந்த நாட்டையாண்டார் என்ற குறிப்பில்லை. ஆயின் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் தாயனூர் நாட்டையாண்ட விவரம் பார்க்கிறோம். அவ்வாறே கங்க அரசர் வேறு கொங்கிளவரசர் வேறு என்றறிகிறோம்.

## கொங்கிளவரசர் :

கொங்கிளவரசர் கொங்கு பகுதியில் அதாவது தற்போதுள்ள சேலம் அல்லது பெரியார் மாவட்டங்களில் ஒரு பகுதியில் இருந்து கால் நடைகளைக் கவர்ந்து செல்ல வந்திருக்க வேண்டும். வருங்காலத்தில் கொங்கிளவரசர் குறித்த கல்வெட்டு வேறு இடத்தில் கிடைப்பின் மேலும் கொங்கு நாட்டின் வரலாறு தெளிவடையும்.

## ஏழாம் நூற்றாண்டு நடுகல் :

மற்றொரு நடுகல் கல்வெட்டு, காலத்தால் சற்றுப்பிற்பட்டது. கி.பி ஏழாம் நூற்றாண்டு எனலாம். வீரன் தலைக்கு மேலும், இடப்புறமும், மொத்தம் ஆறு வரிகளில் எழுத்துக்கள் உள்ளன.

1) (க) ங்க ச்சேவோர் நாடாளாநிற்கதா
2) யன்னூர் நாடு காரி பெருமாறானார்
3) வார் கோயிற் றமர் குலமாணிக்க இ
4) ள வரையர் மகன் கடத்தூர் மேற்
5) கங்கப் படை வந்த ஞான்
6) று குத்திப்பட்டான் கலிப்பொ

## காரிப்பெருமானார் :

குலுமாணிக்க இளவரையர் மகன் கங்கப்படை கடத்தூர் மேல் வந்த ஞான்று போரிட்டார். போரில் கலிப்பொ மாண்டார். இவருக்காக இந்த நடுகல் எடுக்கப்பட்டது. தாயனூர் நாட்டைக் காரிப் பெருமாறன் என்பவர் ஆண்டு வருகிறார். அப்போது கோயிற்றமர் (கோயில் - அரண்மனை, தமர் - உறவினர்) குலமாணிக்கம் இளவரசராக இருந்துள்ளார் கி. பி 6 ஆம் நூற்றாண்டில் பொன்னந்தியார் தாயனூர் நாட்டை ஆண்டது போல் கி. பி 7ஆம் நூற்றாண்டில் காரிப் பெருமாறன் என்பவர் ஆள்கிறார். மாறன் என்ற சொல்லும் பாண்டியரை நினைவு படுத்துவது போல் உள்ளது. காரி என்ற பெயர் பல நடுகற்களில் வரும் சொல்லாகும். நடுகல் வீரன் போரிடும் தோற்றத்தில் காட்டப்பட்டுள்ளான். வலக்கை கத்தியும் கேடயமும் ஏந்தி உள்ளான். அவன் மார்பில் அம்பு பாய்ந்துள்ளது. வீரன் அருகில் மதுக்குடம் காட்டப்பட்டுள்ளது.

## கடத்தூர் :

இந்தக் கல்வெட்டில் கடத்தூர் என்ற ஊர் குறிக்கப்படு கிறது. இங்கு தான் போர் நடந்துள்ளது. பொம்மிடி அருகே கடத்தூர் என்ற பெயரில் உள்ள ஊரே கல்வெட்டில் வரும் ஊராகும். மேற்கண்ட இரண்டு நடுகற்களின்படி தாயனூர் நாடு, பொம்மிடி, கடத்தூர், ஓமலூர் வட்டத்தின் ஒரு பகுதியைக் கொண்டதாக முன்பிருந்துள்ளது.

**கொடுமையினும் கொடுமை :**

மேற்கண்ட நடுகற்களை வழிபடும் அருந்ததியர் இந்த நடுகற்களை ஏரியில் இருந்து மேடான இடத்திற்குக் கொண்டு வந்து கோயிலாகக் கட்டித்தருமாறு கேட்டுள்ளனர். கல்வெட்டைப் படியெடுக்கச் சென்றபோது (1987 இல்) ஏரியில் மண் வாரிக் கொண்டிருந்த பலரும் (அருந்ததியினர் அல்லாதவர்) கல்லைத் தொடவோ, தோண்டியெடுக்கவோ மறுத்ததால் இராமமூர்த்தி நகர் வந்து கிணறு தோண்டுகிற வெளியூர் ஆட்களைக் கொண்டு நடுகற்களைத் தோண்டி வெளியில் எடுத்துப் படியெடுக்க நேர்ந்தது. இதே போல் குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர் மட்டும் வழிபடும் நடுகற்கள் தருமபுரி மாவட்டத்தில் சில ஊர்களில் உள்ளன. குறும்பர் இனத்தவர் வழிபடும் எழுத்தில்லா நடுகற்கள் காவேரிப் பட்டினத்தைச் சுற்றிப் பல உள்ளன. செங்கம் வட்டம் ரெட்டியார் பாளையத்திற்கு அருகில் உள்ள மலையனூர் எல்லையில் உள்ள வட்டெழுத்து நடுகல்லை வன்னியர்களே பெரும்பாலும் வழிபடுகின்றனர். மலையனூர் நடுகல்லில் வன்னியருடைய சின்னமான நெருப்புக் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவு :**

கே. என். புதூர் நடுகற்கள் குறித்து, கடிதம் எழுதிய செல்வராசு என்ற அருந்ததிய இளைஞர் பாராட்டப்படவேண்டிய வராவார். தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை கண்டுபிடிக்க முடியாமல் மண்ணில் புதைந்துள்ள மூன்றாவது நடுகல்லை வெளியில் தோண்டி எடுக்கவும், ஏரியில் உள்ள எல்லா கல்வெட்டு களையும் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**அடிக்குறிப்பு :**

கே. என். புதூர் வட்டெழுத்து நடுகற்கள் இரண்டையும் திருத்தமாகப் படிக்க உதவி புரிந்த இயக்குநர் நடன. காசிநாதன் அவர்களுக்கும் கல்வெட்டாய்வாளர் திருமதி பத்மாவதிக்கும் படியெடுத்த திரு. சம்சுதீனுக்கும் என் நன்றி.

# சிலம்பு காட்டும் குடும்ப அமைப்பு

முனைவர் தா. ஈசுவரபிள்ளை,
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

இளங்கோவடிகள் இயற்றிய இன்றமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம் மூலம் அறியலாகும் சமுதாயத்தில் காணப்பெற்ற குடும்பத்தின் அமைப்பைச் சமூகவியலாளர்கள் கூறும் குடும்ப நிறுவனம் குறித்த விளக்கங்களின் துணைகொண்டு காணும் முயற்சியில் இக்கட்டுரை அமைகின்றது.

## 1. குடும்பம்-விளக்கம் :

சமாயத்தில் அமைந்து காணப்பெறும் பல்வேறுநிறுவனங்களுள் குடும்பம் என்ற நிறுவனமும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கின்றது. உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் இக்குடும்பம் என்ற நிறுவனம் ஒரே அமைப்புடன் திகழவில்லை. எனினும், எல்லாச் சமுதாயங்களிலும் இடம்பெறும் நிறுவனமாக அது திகழ்கின்றது.

குடும்பம் என்பது இரத்த உறவுகளின் வழியாகவோ, திருமணம் மூலமாகவோ தொடர்புடைய உறுப்பினர்களை உள்ளடக்கிய சமூகக் குழு என்று பொதுவாகக் கருதப்பெறுகிறது (Rohnald W. Smith, Sociology, An Introduction, P. 71) எனவே உறுப்பினர்கள் தாம் பிறந்து, வளர்ந்து, திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் குழுவினர் என்ற நிலையில் குடும்பம் என்ற நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் ஆகின்றனர். இக்குடும்பம் என்பது தரும சிந்தனைகளையும் பண்பாட்டையும் வளர்க்கும் மூலாதாரமான அமைப்பு என உளவியலாளர்கள் கருதுகின்றனர் (Alwood, Sociology and its Psychological Aspects, P. 213). குடும்பம் என்பது திருமணக் கட்டுகளாலும், இரத்த உறவுகளினாலும் இணைக்கப்பெற்ற மக்கட்கூட்டம் என்றும், பொதுவான பண்பாடுகளைத் தம்குழுவினரிடையே உருவாக்கிப் பாதுகாத்து வரும் அமைப்பு என்றும் விளக்கிக் காட்டும் பர்கஸ் மற்றும் லோக் என்பவர்கள் (Burgess, E. W, Locke, H. J The Family, P. 8) குடும்ப அமைப்பில் சமுதாயத்தில் வாழ்கின்ற

மக்கட் கூட்டத்தினர் தாய் - தந்தை, கணவன்-மனைவி, மகன்-மகள் சகோதரன் - சகோதரி என்று பல்வேறு உறவு முறைகளால் தொடர்புறுத்தப்பெற்று ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்பெறுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர். பெர்னார்டு பிலிப்ஸ் என்ற அறிஞர் இரத்த உறவு, தத்தெடுத்தல் போன்றனவற்றால் தொடர்புடைய மக்களால் உருவாக்கப்பெற்ற சமூக அமைப்பு என்று குடும்ப நிறுவனம் குறித்து விளக்கம் தருகின்றார் (Bernard Phillips, Society p.230)

## 2. குடும்பத்தின் வகைகள் :

சமூகவியலாளர் குடும்பத்தில் காணப்பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், குடும்பத்தில் அதிகாரம் செலுத்துவோர் யார் என்பதன் அடைப்படையிலும், வாழும் இடத்தின் அடிப்படையிம், திருமண முறையின் அடிப்படையிலும் குடும்பம் என்ற நிறுவனத்தை வகைப் படுத்திக் காட்டுவர். இத்தகைய விளக்கங்களின் அடிப்படையில் சிலப்பதிகாரம் காட்டும் சமுதாயத்தில் இடம்பெற்ற குடும்பம் பற்றிச் சிறிது காணலாம்.

### 2.1. எண்ணிக்கையின் அடிப்படையில் :

குடும்பத்தில் அங்கம் வகிக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சிறுகுடும்பம் (Neuclear family) என்றும், பரந்துபட்ட குடும்பம் (Extended family) என்றும் இருவகைப்படுத்துவர். இவற்றுள் கணவன், மனைவி அவர்களுடைய குழந்தைகள் ஆகியவர்களை உள்ளடக்கிய குடும்பம் சிறுகுடும்பம் எனக் கருதப்பெறுகின்றது. சிற்சில வேளைகளில் முற்கூறிய உறுப்பினர்களுடன் வேறு சில உறுப்பினர்களும் சிறு அமைப்புள் இடம்பெறுவர் என்றும் விளக்கம் அளிக்கப்பெறுகின்றது (Paul B. Hunt, Chester, L. Hunt, Sociology, P. 217) சிலப்பதிகாரம் காட்டும் குடும்ப அமைப்பு சிறு குடும்ப அமைப்மே என்று எண்ணத் தோன்றுகிறது. அது கணவன், மனைவி, குழந்தைகள் ஆகியவர்களை உள்ளடக்கியதாகவே காணப்பெறுகின்றது. சிலப்பதிகாரம் மூலம் கோவலனின் தந்தை, தாய், கோவலன் ஆகியவர்களும், கண்ணகியின் தந்தை, தாய், கண்ணகி ஆகியவர்களும் அடங்கிய சிறு குடும்ப அமைப்பே பெரும்பாலும் காணப்பெற்றது என்பது புலனாகின்றது.

## 2. 2. அதிகாரத்தின் அடிப்படையில் :

குடும்பத்தில் அதிகாரம் செலுத்துவோர் யாவர் என்பதனை அடிப்படையாகக் கொண்டு குடும்பத்தை ஆண் ஆதிக்கக் குடும்பம், பெண் ஆதிக்கக் குடும்பம், முதியவர் ஆதிக்கக் குடும்பம், சம அதிகாரம் உள்ள குடும்பம் என வகைப்படுத்திக் காட்டுவர். சிலப்பதிகாரம் காட்டும் குடும்ப அமைப்பில் ஆண் ஆதிக்கக்குடும்ப அமைப்பின் கூறுகளே இடம்பெறுமாற்றை உணரலாம். கோவலன், கண்ணகியின் திருமணத்தை இருவருடைய தந்தைமார்களும் தான் முடிவு செய்கின்றனர். கோவலன் கண்ணகி வாழும் குடும்பத்திலும் கோவலனே ஆதிக்கம் நிறைந்தவனாகக் காணப் பெறுகின்றான்

## 2.3 திருமண முறையின் அடிப்படையில் :

திருமண முறையினை அடிப்படையாகக் கொண்டு குடும்பத்தை ஒருதார மணக்குடும்பம், பலதார மணக்குடும்பம், பல ஆடவர் மணம், குழுமணக்குடும்பம் என்று வகைப் படுத்துவர். ஓர் ஆடவன் ஒரு பெண்ணை மட்டும் மணம் புரிதல் ஒருதார மணக்குடும்பம் என்றும், ஓர் ஆடவன் பல பெண்களை மணம் புரிதல் பலதார மணக் குடும்பம் என்றும், ஒரு பெண் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட ஆடவர் களை மணம் புரிதல் பல ஆடவர் மணம் என்றும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட ஆடவர்கள் ஒரு பெண்ணையோ அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற் பட்ட பெண்கள் ஓர் ஆடவனையோ மனம் புரிதலைக் குழு மணம் என்றும் விளக்கலாம். சிலம்பு காட்டும் சமுதாயத்தில் ஒருதார மணக்குடும்ப அமைப்பே பெரும்பான்மையும் காணப் பெற்றதுடன், அவ்வகையே சமுதாயத்தால் வலியுறுத்திப் போற்றப்பெற்றிருந்தது என்றும் துணியலாம். கோவலன் எண்ணற்கரிய நற்பண்புகள் பல பெற்றிருந்தும் கூட அவன் மாதவியாகிய கணிகையை நாடியமையே அவன் பண்பிற்குக் களங்கமாக அமைகின்றது. ஆனால், சமுதாயத்தில் சிறுபான்மை பலதார மணமும் இடம் பெற்றிருந்தது என்பதை மாலதி வரலாறு சுட்டுகிறது மாலதி மாற்றாள் குழந்தைக்குப் பாலூட்டும்போது பால் விக்கிக் குழந்தை இறந்துவிடும் செய்தியைக்காட்டும் சிலப்பதிகார அடிகளால் இக்கருத்து வெளிப்படுகிறது. எனவே சிலம்பு காட்டும் சமுதாயத்தில் பெரும்பான்மையும் ஒருதார மனக்குடும்பமே காணப்பெற்றது எனத் தெளியலாம்.

மேலும், திருமணத்தின் அடிப்படையில் குடும்பத்தை அகமணக்குடும்பம் என்றும் புறமணக்குடும்பம் என்றும் வகைப் படுத்தலாம். ஓர் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர்களிடையே மட்டும் நிகழும் திருமணம் அகமணமுறை மணம் ஆகும். சிலப்பதிகாரத்தில் மணப்பெண்ணாகிய கண்ணகியும், மண மகனாகிய கோவலனும் வணிகர் வகுப்பைச் சார்ந்தவர்களாக உள்ளமையால் இக்குடும்ப அமைப்பை அகமணமுறைக் குடும்பம் என்று கூறமுடிகிறது.

## 2.4. வாழும் இடத்தின் அடிப்படையில்

திருமணம் முடிந்த பின்னர் எங்கு இல்வாழ்க்கையைத் தொடங்குகின்றனர் என்பதன் அடிப்படையில் மணமகன் வீட்டில் இல்வாழ்க்கையை நடத்தல், மனைவி வீட்டாருடன் இல்வாழ்க்கையை நடத்தல், தனியாக இல்வாழ்க்கையை நடத்தல் என்ற மூன்று நிலைகளைக் காட்டுவர். சிலப்பதிகாரம் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடிந்தபின்னர் அவர்களுடைய பெற்றோர்களே அவர்கள் நடத்தும் இல்லற வாழ்க்கையின் பெருமைகளைக் காணவேண்டி அவர்கள் தனியாக இல்லறம் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றனர். இது அக்காலக் குடும்ப அமைப்பினைக் காட்டுவதுடன், இளமையிலேயே இல்லறம் நடத்துதற்குரிய பயிற்சியை மணமக்கள் பெற வேண்டும் என்று எண்ணிய சமுதாய எண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது எனலாம்.

## 3. இல்லற வாழ்க்கை

குடும்பத்தின் இன்றியமையாத தன்மையாகிய இல்வாழ்க்கை சிலப்பதிகாரத்தில் சிறப்பாகப் பேசப்படுகிறது. இல் வாழ்க்கையைச் சிலப்பதிகாரம் இல், மனையறம் எனச் சிறப்பித்துச் சுட்டுகிறது. மேலும், பெருந்தண் வாழ்க்கை (2:86) என்றும், வடுநீங்கு சிறப்பின் மனையறம் (3:172) என்றும் அடைகள் கொடுத்துச் சிறப்பிக்கப் பெறுகின்றன. இல்வாழ்க்கையானது குற்றமற்ற சிறப்பினையுடையதாக விளங்கவேண்டும் என்று சமுதாயம் வலியுறுத்தியமை புலனாகிறது.

### 3. 1. திருமணம் :

திருமணம் என்பதற்கு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற் பட்டவர்கள் குடும்பத்தை நிறுவிக்கொள்ளத் துணைபுரியும், ஏற்றுக்கொள்ளப்பெற்ற சமுதாய முறை என்று விளக்கம்

அளிக்கப்பெறுகின்றது (Paul B. Hurton, Chester L. Hunt, Sociology p. 241) சமூகவியல் அடிப்படையில் திருமணம் என்பதை ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் இடையேயுள்ள பால், பொருளாதார உறவுகளுக்கு அளிக்கப்பெறும் இசைவு (Ronald W. Smith, Sociology, An Introduction p. 172) என்றும், இத்திருமணமும் குடும்ப நடவடிக்கைகளும் பெரும்பாலும் பண்பாட்டினாலேயே தீர்மானிக்கப்பெறுகின்றன (David Dresseller, William M. Wills, Jr., Sociology, p. 39) என்றும் விளக்கங்கள் அளிக்கப்பெறுகின்றன.

சிலப்பதிகாரத்தில் திருமணம் மணம் (1:42, 14:131) எனக் குறிக்கப்பெறுகின்றது. திருமணத்தின்போது மணமகன் மணமகளின் கையைப்பிடித்து ஏற்றுக்கொள்ளப்பெறும் காரணம் பற்றி அதைக் கைப்பிடித்தல் என்பர். வடமொழியில் இதைப் பாணிக்கிரகணம் என்பர். சிலப்பதிகாரத்தில் இவ்வழக்கத்தை நினைவூட்டும் வகையில் கைப்பிடித்தனன் என்ற சொல்லாட்சி இடம்பெறுகின்றது. (9:45-46)

### 3. 2. திருமண வயது, நாள் :

சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கு 16 வயதிலும் (1:34) கண்ணகிக்கு 12 வயதிலும் (1:24) திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பெறுமாற்றால் அக்காலச் சமுதாயத்தில் பொதுவாக ஆணுக்கு 16 வயதிலும் பெண்ணுக்கு 12 வயதிலும் திருமணம் நடத்தும் வழக்கம் இருந்துள்ளது என அறிய முடிகின்றது. திருமணத்திற்குரிய மங்கல நாளைத் தேர்ந்தெடுக்கும் வழக்கமும் காணப்பெற்றது (1:50-51)

### 3. 3. திருமணச் சடங்குகள் :

கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடைபெறவிருக்கும் திருமணம் குறித்து யானையின் எருத்ததின்மேல் மங்கல மகளிரை இருத்தி மாநகர்க்கு மணம் என்னும் நிகழ்ச்சியை மகிழ்வுடன் அறிவின்றனர் (1:43-44). முரசு முழங்கவும், மத்தளம் முதலியன அதிரவும், சங்குகள் முதலியன முழங்கவும் வெண்குடைகள் உடன் வரவும் ஊரில் மங்கல நாண் வலம் வருகின்றது. (1 : 45 - 47) பெண்கள் மணப்பொருட்கள், மலர்கள் ஆகியவற்றை ஏந்தியும், பாடல்கள் பாடியும் சாந்து, புகை, மாலைகள், சுண்ணம், கலம், நிறைகுடம், முளைப்பாலிகைகள் ஆகியவற்றை ஏந்தியும் திரளாக வருகின்றனர் (1 : 54 - 59). மாமுது பார்ப்பார் மறைவழி

காட்டிடத் தீவலம் செய்து வைதீக முறைப்படி திருமணம் நடைபெறுகின்றது (1 : 52 - 53). பின்னர் மணமகன் மணமகளுக்கு மங்கல அணி அணிவிக்கின்றான் (1 : 47) உடன் எல்லோரும் மலர்தூவி வாழ்த்துகின்றனர் (1 : 60-62)

## 3. 4. கணவன் - மனைவி

இல்வாழ்க்கை சிறப்புடன் செயல்பட இன்றியமையாத பங்கு வகிப்போர் கணவன் - மனைவி இருவரும் ஆவர். சிலப்பதிகாரத்துள் கணவன் அன்பன் (18 : 17 18 : 37), கணவன் (5 : 227, 9 : 44, 9 : 55, 9 : 60, 10 : 216, 15 : 73, 15 : 77, 125, 23 : 120, 23 : 179), காதலன் 14 : 58, 15 : 139, 16 : 34, 16 : 38, 21 : 41, 25 : 111), கேள்வன் (10 : 76, 18 : 32), கொழுநன் (4 : 45, 4 : 58, 5 : 189, 14 : 118 21 : 28) நண்பன் (10 : 38) என்றும், மனைவி காதலி 6 : 3, 13 : 40, 13 : 44, 15 : 111 16 : 64, 23 : 48) கிழத்தி (2 : 84), பெருமனைக்கிழத்தி (13 ; 57, 22 : 138) மனைக்கிழத்தி (15 : 173), மனைப்பெருங்கிழத்தி (15 : 165), மனையாள் (9 : 7) மனையோள் (15 : 55) மனைவி (9 : 33, 15 : 188, 15 : 196, 20 : 62, 23 : 104), மாது (14 : 46) என்றும் சுட்டப்பெறுகின்றனர். கணவன் மீது மனைவி கொண்டுள்ள அன்பைப் புலப்படுத்தும் வகையில் ஆர்த்த கணவன் (9 : 37). காதற் கணவன் (19 : 10), என்று குறிப்பிடப்பெறுகின்றனர். கோவலனைப் பிரிந்த கண்ணகி கண்களில் மைதீட்டல், நெற்றியில் திலகமிடல், புன்னகை இழத்தல், கூந்தலில் நெய்யணிதலை விடுதல் ஆகிய நிலையில் கையற்ற நெஞ்சமுடன் வாழ்கின்றாள் (4 : 47-57). பாண்டிய மன்னன் இறந்ததும் கோப்பெருந்தேவி கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என எண்ணி (20 . 80), மன்னவன் செல்வுழி செல்க யான் எனத் தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள் போல் உடன் மாய்கின்றாள். (25 : 24-26). இவை மனைவி கணவன்பால் கொண்டுள்ள அன்பின் பிணைப்பைப் பறைசாற்றுவனவாய் அமைகின்றன.

## 3. 5. இல்லம்

குடும்பம் என்ற நிறுவனம் சிறப்புடன் செயலாற்ற அடிப்படைக் களமாய் அமைவது இல்லம் ஆகும். இவ்வில்லம் சிலப்பதிகாரத்தில் இல், மனை என்று சுட்டப்பெறுகின்றது.

## 4. குடும்பத்தின் செயல்பாடுகள்

சமூகவியலாளர்கள் குடும்பம் என்ற நிறுவனம் பல சமூக, பொருளாதார, சமயச் செயல்பாடுகளைக் (functions) கொண்டுள்ளமையை விளக்கிக் காட்டுவர். சிலப்பதிகாரம் மூலமும் குடும்பத்தின் செயல்பாடுகள் சிலவற்றை உணரலாம்.

### 4. 1. குழந்தைகள் பெறுதலும் வளர்த்தலும்

சமுதாயம் இடைவிட்டுப்போகாதவாறு அதன் தொடர்ச்சியைக் (Continuity) கட்டிக்காக்கும் அடிப்படைச் செயல்பாடாகிய குழந்தைகளை உருவாக்கும் பணியைக் குடும்பம் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. (Bernard Phillips, P. 230) சமுதாயத்தில் புதிய உறுப்பினர்களை உருவாக்கும் ஆதார நிறுவனம் (Primary institution) என்ற நிலையில் குடும்பம் சமூக வாழ்க்கையை மக்கள் மறக்காமலிருக்கத் துணைசெய்கின்றது (George Ritzev p. 385) இதனால்தான் குழந்தைகளின் அடிப்படை வளர்ச்சியானது தாயின் மடியிலும், குடும்பம் என்ற ஊஞ்சலிலும் காணப் பெறுவதாகக் கருதப்பெறுகின்றது. மேலும் இந்துச் சமுதாயத்தில் குழந்தைப்பேறு சமய நிலையிலும் முக்கியமான-தாகக் கருதப்பெறுகின்றது. குழந்தைப்பேறு, அதிலும் ஆண் குழந்தைப்பேறு மூலமே வாழ்க்கை நிறைவு பெறுவாதாக நம்புகின்றனர். சிலப்பதிகாரத்தில் குழந்தைகள் குழவி (9 : 25, 15 : 28, 21 : 181), புதல்வர் (22 : 129, 23 : 90) மக்கள் (15 : 178), மகவு (9 : 5, 9 : 8) எனக்குறிப்பிடப்பெறுகின்றனர். சாத்தன் தன் தந்தை தாயார்க்கு நீர்க்கடன் முதலாய கடன் களைக் கழிக்கின்றான் (0 : 31-32) பிறர் ஈன்ற, ஆதரவற்ற குழந்தைகளை எடுத்து வளர்க்கும் பேருள்ளம் கொண்ட சான்றோர்களும் சமுதாயத்தில் வாழ்ந்துள்ளனர் (19 : 55-56).

### 4. 2 பால் நடவடிக்கைகளில் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்தல் : (Regulations on sexual behaviours)

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே நிகழும் பால் வெளிப்பாடுகளில் குடும்பம் தன் உறுப்பினர்களிடையே சில ஒழுங்குகளையும், கட்டுப்பாடுகளையும், வகுத்து, அவற்றைக் குடும்ப உறுப்பினர்கள் பின்பற்றுமாறு வலியுறுத்தலையும் குடும்பத்தின் இன்றியமையாத சமூகச் செயல்பாடாகக் கூறுவர். சிலப்பதிகாரத்திலும் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகக் கற்பு வலியுறுத்தப்பெறுகின்றது. இன்றுள்ள மகளிர்க்கு

இன்றியமையாக் கற்பு எனப்போற்றப்பெறுகின்றது. (15:142-148) கற்புடைய கண்ணகி பொற்புடைய தெய்வம் எனப் போற்றப் பெறுகின்றாள். கண்ணகியையும் கோவலனையும் என் மக்கள் எனக்கூறிய கவுந்தியடிகளிடம் வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் உடன் வயிற்றோர்கள் எவ்வாறு கணவன் மனைவியாக வாழமுடியும் என வினவுகின்றனர். (10:227-228) பெண் கற்பை வலியுறுத்திய இளங்கோவடிகள் ஆண் கற்பையும் கோவலன் வாழ்க்கை மூலம் வலியுறுத்து கின்றார். இவ்வாறு சமுதாய உறுப்பினர்கள் பால் நடவடிக்கை களில் ஒழுங்குடன் வாழவேண்டும் என வலியுறுத்தப் பெற்றமையைச் சிலப்பதிகாரம் வலியுறுத்திக் காட்டுகின்றது.

## 4. 3. பிற செயல்பாடுகள் :

முற்கூறியவை தவிரக் குடும்பத்தின் கடமைகளாக அறநெறியாளரை ஓம்புதல் (2:85), அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்புதல், துறவோர்க்கெதிர்தல், விருந்தெதிர் ஒம்புதல் (2:86, 16:71-73, 22:132) என்பன விளக்கப் பெறுகின்றன. சுற்றத்தினர் மறத்தலரிய சுற்றத்தினர் (2:85), நெருங்கிய சுற்றத்தினர் (18:59-60), எனச் சுட்டப்பெறு மாற்றால் குடும்ப உறுப்பினர்களிடையேயுள்ள பிணைப்பின் வலிமை வெளிப் படுத்தப்பெறுகின்றது.

முற்கூறியனவற்றால் சிலப்பதிகாரம் காட்டும் சமுதாயத்தில் இடம்பெற்ற குடும்ப அமைப்பும், குடும்பத்தின் செயல் பாடுகளும், வழக்கங்களும், பண்பாடும் ஓரளவு வெளிப்படு மாற்றை உணரலாம்.

# தமிழில் வட்டார நாவல்கள்

இரா. பாலசுப்பிரமணியன்,
தமிழியற்புலம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி 623 003.

நாவல் இலக்கியத்தின் பலவகைகளுள் வட்டாரநாவலும் (Regional Novel) ஒன்று. பிரதேச நாவல், கிராமிய நாவல் போன்ற வேறுபெயர்களிலும் வட்டாரநாவல் வழங்கப் படுவதுண்டு.

## எது வட்டாரம்?

அரசியல் அடிப்படையில் பகுக்கப்பட்ட பிரிவுகள் நிர்வாக வசதியை முதன்மையாகக் கொண்டவை. அவ்வகை வட்டாரப் பிரிவுகளைக்கொண்டு ஆய்வுகள் நிகழ்த்தவியலாது. மண்ணை அடிப்படையாகக் கொண்டு வட்டாரங்களைப் பாகுபடுத்தும் முறை வழக்களவில் உண்டு. கரிசல்மண் நிறைந்த பகுதி களைக் கரிசல் வட்டாரம் என்று குறிப்பிடுவதை இங்கு எடுத்துக்காட்டிற்காகக் குறிப்பிடலாம். கோயம்புத்தூர், இராம நாதபுரம், திருநெல்வேலி போன்ற வெவ்வேறு பெரும் பிரிவுகளிலும் (மாவட்டங்களிலும்) கரிசல் வட்டாரங்கள் இருக்கக் கூடும். கரிசல் பொதுப்படையாக இருந்தாலும், இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளும், பண்பாட்டுக் கூறுகளும் ஒன்றுபோல இருக்குமென்று சொல்வதற்கில்லை. குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட சூழலில் வாழும் குறிப்பிட்ட இனமக்களைக் குறித்து வட்டாரப்பாகுபாடுகளை ஆய்வாளர்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும். எனவே, வட்டாரம் என்ற சொல் நிலவியலைத் தாண்டி இங்கு வாழும் மக்கள் சமூகத்தையும் கருத்தில் கொள்ளுதல் நலம்.

## வட்டாரமும் மக்கள் வாழ்க்கையும்!

மண்ணிற்கும் மக்கள் சமூகத்தின் வாழ்க்கை முறைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மலையோரப் பகுதிவாழ் மக்களிட-மிருந்து சமவெளிப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைப்பல நிலைகளில் வேறுபட்டிருக்கும். இவ்விரண்டு பகுதிகளிலிருந்தும் கடலோரப்பகுதிகளில் வாழும் இனத்தவர்களின் வாழ்க்கை மாறு பட்டிருக்கும் இயந்திரயுகத்தின் தாக்கமும் நாகரீகத்தின் செல் வாக்கும் சமவெளிப்பகுதிகளில் மிகுதியாக இருப்பதால்

மாறிவரும் சமூக மதிப்பில் தோன்றும் பிரச்சினைகளைத் தகர்ப் பதற்குத் தகுந்த வாழ்க்கை முறைகளையும் காணலாம்.

சாதி, தொழில், மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் இவைகளைக் கொண்டும் சிறுபிரிவுகளை வகுத்துக்கொண்டு வட்டாரப் பண்புகளைத் தெளிவாக்கிக் கொள்ளலாம்

## நடப்பியல் தன்மை :

படைப்பிலக்கிய ஆசிரியனை அவன் சார்ந்துள்ள சமூகம் வெகுவாகப் பாதிக்கிறது. இப்பாதிப்பின் அனுபவம் கலைப் பொருளாக வெளிப்படும்போது இலக்கியம் பிறக்கிறது. சமூகத்தின் தனிமனிதப் பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகள் இவைகளைச் சமுதாயவியல் பார்வையில் புரிந்து கொண்ட ஆசிரியன் பொருத்தமான வட்டாரச்சூழலில் வெளிப்படுத்தும் போது வட்டார இலக்கியங்கள் தனித்த இடத்தைப் பெறுகின்றன. இவ்வகை இலக்கியங்களில் மிகுத கற்பனைக்கு இடமில்லாமல் நடப்பியல் தன்மையல் படைப்பதே சிறந்த அணுகு முறையெனலாம்.

## வட்டார நாவலின் பண்புகள் :

பொதுவாக எல்லாவகை நாவல் இலக்கியங்களிலும் வட்டாரக் கூறுகள் இடம் பெற்றிருக்கும். ஆனால், வட்டாரக் கூறுகளை முதன்மையாகக் கொண்டு சித்தரிக்கப்படும் நாவல் களையே வட்டார நாவல் வகைக்குள் அடக்குதல் பொருந்தும். எடுத்துக்காட்டிற்காக மொழிவழக்கை இங்குக் குறிப்பிடலாம். வட்டார வழக்குகளையும் சொற்களையும் பயன்படுத்துவது வட்டாரநாவல் வகையின் பல கூறுகளில் ஒன்றாகும். இப்பயன் பாடு பல நாவல் வகைகளில் பரக்கக் காணலாம். புதுமைப் பித்தன் தம்முடைய கதைகளில் திருநெல்வேலி வட்டார பிள்ளைமார் சமூகத்தின் வழக்கினையும், பி. எஸ். இராமையா மதுரை வட்டார வழக்கினையும், தி. ஜானகிராமன், தி. ஜ. ர. போன்றோர்கள் அந்தணர் வழக்குகளையும் பயன் படுத்தியுள்ளனர். இப்பயன்பாட்டிற்காக இவர்தம் படைப்புக் களையெல்லாம் வட்டார முத்திரைக்குள் அடக்கிப் பார்த்தல் இயலாது. வேறு சில வட்டாரப் பண்புகளும் மேலோங்கியிருத் தல் வேண்டும்.

**மண்வாசனை :**

வட்டார நாவலில் பின்புல வருணணையில் வட்டாரமணம் வீசுதல் வேண்டும். மணம் பின்புலத்தில் மட்டும் வெளிப்பட்டு நிற்பதில்லை அந்தப் பின்புலத்தில் வாழும் மக்களைச் சரியான கோணத்தில் படம்பிடித்துக் காட்டவேண்டும். அப்பொழுதுதான் பாத்திரப்படைப்புச் சிறப்பாக அமையும் நடை, உடை, பாவனை, பழக்கவழக்கங்கள் இவைகளை நுட்பமாகப் படைப்பில் பயன்படுத்தியிருக்க வேண்டும். சங்கராமின் விவசாயி வேங்கடாசலம் (மண்ணாசை) சு. சண்முகசுந்தரத்தின் நாகம்மாள் (நாகம்மாள்) பழமைப் பிடிப்பில் வாழும் இராஜம்கிருஷ்ணனின் கோகியின் குடும்பம் (குறிஞ்சித்தேன்) போன்ற பாத்திரங்களெல்லாம் யதார்த்தமாய் வட்டாரத்தின் இயல்பைப் பிரதிபலிக்கின்றன.

**மொழி வழக்கு :**

பாத்திங்கள் இந்த மண்ணிற்குரிய வழக்குகளையும் சொற்களையும் பேசுவதாக அமையவேண்டும் இவ்வாறு அமைப்பது தவிர்க்க முடியாத நிலையாகும். இவ்வித வழக்குகளைக் கையாள்வதால் இலக்கியத்தின் தரம் குறைகிறது என்பது சிலரின் கருத்தாகும். குறிப்பிட்ட பிரதேசத்தில் கதை நடப்பதாக எழும்போது இந்தப்பிரதேச வழக்குகளையே கையாளவேண்டும். வழக்குச்சொற்கள் மரபு வழக்குகள் போன்றவை சிலவேளை பொருள் புரிபடாமல் இருக்கக்கூடும். முன்பின் இடம் நோக்கிப் பொருள் அறிந்துகொள்ளுதல் இயலும். மற்றவர்களுக்குப் புரியும் வண்ணம் வேறு இடத்தில் இவைகளுக்கு விளக்கங்கள் கொடுக்கலாம். சண்முகசுந்தரத்தின் நாவல்களில் கொங்கு வட்டார வழக்குகளையும் ஹெப்சிபாஜேசுதாசன் நாவல்களில் நாஞ்சில் நாட்டு வழக்குகளும் சிறப்பாக இடம் பெற்று நிற்பதை இங்குக் குறிப்பிடலாம்

**மானிடவியல் பார்வை :**

சமூகவியல் பார்வையுடன் மானிடவியல் பார்வையும் நாவலாசிரியருக்குத் தேவைப்படுகிறது. குறிப்பிட்ட மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளையும் உற்றுநோக்கி அறிந்து நாவல் இலக்கியத்தில் பயன்படுத்யிருத்தல் அவசியமாகும். இராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித் தேனை இங்குக் கூறலாம். நீலகிரியில் வாழும் படர்களின் வாழ்க்கை இந்நாவலில் சித்திரமாக்கப்பட்டுள்ளது. தெய்வ ஹப்பா

(தேவர் பண்டிகை), சகலாத்தி போன்ற பண்டிகைகள் இவர்களிடம் இடம் பெறுவதாசக் கதைபோக்கில் இயல்பாய் வெளிப்படுத்துகிறார். தேவையான இடங்களில் தனிப்பகுதிகளிலும் ஆசிரியர் விளக்கங்கொடுத்துச் சென்றுள்ளார். நீல பத்மநாபனின் தலைமுறைகளில் நாகர்கோயில் வட்டாரப்பகுதியில் வாழும் இரணியல் சமூகத்தினரின் பண்பாடுகள் விளக்கம் பெறுகின்றன. மதுரை வட்டாரத்தின் மறவர் பண்பாட்டை விளக்குவதாய் சி. சு. செல்லப்பாவின் வாடிவாசல் அமைகிறது.

வட்டாரப் பண்பாட்டில் வாய்மொழி இலக்கியத்திற்குத் தனிச்சிறப்பும் பயன்பாடும் உண்டு. பழமொழி (சொலவடை), உவமைகள் மரபு வழக்குகள், பாடல்கள் போன்றவை வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபட்டிருக்கும். இவைகளை நாவல்களில் வேண்டுமிடத்தில் நாவலாசிரியர்கள் கலைப் பொருளாச்கிக் கொள்வர். ஆர். சண்முகசுந்தரத்தின் சட்டி சுட்டதில் இப்பயன்பாடு பொருத்தமாகக் மையாளப்பட்டுள்ளது.

## கருவும் பொதுத்தன்மையும் :

வட்டாரப் பிரச்சினைகள் பொதுமைப்படுத்துவதாய் (Universal) அமையவேண்டும். இதனை எடுத்துக்காட்டின் வழிவிளக்கலாம். சண்முகசுந்தரத்தின் நாகம்மாள் கூட்டுக் குடும்பப் பிரிவினைக்குக் காரணமாகிறாள். செல்வாக்குள்ள குடும்பம் வீழ்ச்சி அடைகிறது. அவரின் சட்டி சுட்டதில் தந்தை மகன்களுக்கிடையே பிரிவினை அமைகிறது. பிரிவினையின் பயன் வீழ்ச்சியைக் கொடுக்கும் என்பதே பொதுமைப் படுத்தப்பட்ட கருவெனலாம். சண்முகந்தரத்தின் (1917) காலம் விடுதலைப் போராட்டம் கொழுந்துவிட்டெறிந்த காலமாகும். இக்காலங்களில் பிரிவினை இயக்கம் நாட்டை இருகூறாக்க முயன்று கொண்டிருந்தது. இதனை விரும்பாதவர்களில் சண்முகசுந்தரமும் ஒருவர். இதனைத் தம்முடைய வட்டார நாவலின் மூலம் பொதுமையாக்கிக் காட்டுகிறார்.

தொழில்சாதி இவைகளுக்கு முதன்மை கொடுத்தும் சில வட்டார நாவல்கள் அமைகின்றன. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் வாழ்வை மையமாகக்கொண்டு பின்னப்பட்டது இரகுராதனின் பஞ்சம் பசியுமாகும். அதே நெசவுத் தொழிலில் ஈடுபட்ட சௌராட்டிர சமூகத்தினர்கள் பிரச்சினை

(இதன் தொடர்ச்சியை 259ஆம் பக்கம் பார்க்க)

## இலக்கிய இன்பம்

இரா. முரளி,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

உலக வாழ்க்கையில் மனிதன் கண்டு அனுபவித்து உணரும் காட்சி மற்றும் உணர்வு வகைகளை எண்ணிட்டுக் கணக்கிட முடியாது. இன்பமயமானவை, துன்பமயமானவை, இன்பமும், துன்பமும் கலந்தவை என்று எத்தனையோ வகை உணர்வுகள். உணர்வுகள் இப்படியென்றால் காலை, மாலை, நண்பகல், நள்ளிரவு, கோடை, வசந்தம், கடும்பனி, கடுங்குளிர் என்று காலமும் மாறி மாறி விசித்திரம் காட்டுகிறது. மண்ணும் விண்ணும் எத்தகைய அற்புதக் காட்சிகள் நிறைந்தவை! பார்க்கும் அனைவருக்கும் இவை ஒரே மாதிரியாகத் தான் தோற்றமளிக்கின்றன. ஆனால் ஒவ்வொரு மனிதரும் இதை உணரும் விதமே வித்தியாசமானது. காக்கை, குருவி, கடல், மலை இவற்றை நாம் காணும்போது, நம்மால் உணரமுடியாத வித்தியாசம் கவிஞரின் உணர்வில் தெரிகிறது.

> "காக்கை குருவி எங்கள் சாதி — நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்
> நோக்கும் திசையெல்லாம் நாம் அன்றி வேறில்லை
> நோக்க நோக்கக் களியாட்டம்"

இவ்வாறு உள்ளத்தில் பொங்கி வழியும் மகிழ்ச்சி அல்லது தாங்க முடியாத நெஞ்சத்தைப் பிழியும் சோகம் போன்ற உணர்வுகளைக் கல்லிலோ, சொல்லிலோ இசையிலோ வடிக்கின்றபோது அது உயிர்த்துடிப்பு நிறைந்த கலைப்படைப் பாகின்றது.

---

258ம் பக்கத் தொடர்ச்சி

களைத் தாங்குவதாக வெங்கட்ராமனின் வேள்வித்தீ அமைகிறது. இராஜம் கிருஷ்ணனின் அலைவாய்க்கரையில், கரிப்புமணிகள் போன்ற நாவல்களில் மீன்பிடித்தொழிலாளர் வாழ்க்கையும், உப்பளத் தொழிலாளர் வாழ்க்கையும் முறையே சித்தரிக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் எத்தனையோ வட்டார வாழ்க்கைகள் எழுத்தாளர் கண்களில் தென்படாமலேயே இருக்கின்றன. அவைகளை எழுத்தாளர்கள் இனங்கண்டு இனங்கண்டு இலக்கியங்களாகப் படைப்பது தேவையான முயற்சியாகும்

இவ்விதமாக இயற்கைக் காட்சிகளிலோ, மனிதனின் எண்ணங்களிலோ ஈடுபட்டு அனுபவிக்கின்ற திறம் பலருக்கு இருக்கலாம் ஆனால் அவற்றை உள்ளபடி வெளியிடுதலும், அவ்வெளியீட்டில் அழகும், நயமும் மிளிரும் படி அமைத்து விடுதலும், எல்லோருக்கும் எளிதில் இயலுவதில்லை.

பொங்கி வரும் உணர்வுகளையும் எண்ணங்கயையும் அவற்றின் தொனி மாறாமல் சொல்லில் வடிப்பவன் தான் சிறந்த எழுத்தாளனாகின்றான் அதுபோலவே, ஒரு கவிதையை அல்லது கதையை எழுத்தாளனின் உணர்வுகளுக்குச் சமமாக ஒருவன் புரிந்து கொள்கிறான் என்றால் அவனே சிறந்த வாசகன்.

மேதைகள், தம் உள்ளத்தில் பொங்கி எழும் உணர்வுகளையும், எண்ணங்களையும் கற்பனையில் கண்ட அற்புதங்களையும் வெளியிடும்பொழுது அவை கவிதைகளாகவோ, நாடகங்களாகவோ அல்லது கட்டுரைகளாகவோ உருவெடுக்கின்றன. இவற்றை ஊன்றி, அனுபவவித்துப் படிக்கும்பொழுது வாசகனது உள்ளத்தில் ஏற்படும் கிளர்ச்சியில் ஆழமும், உருவமும் கலைஞனின் உள்ள நிலைக்குச் சற்றேறக் குறைய சமமாக இருக்குமானால் அக்கலைஞன் தன் படைப்பில் வெற்றிபெற்று விட்டான் என்று கூறலாம். கவிஞன் தான் கண்ட காட்சியின் முழு பிரபாவத்தையோ தனது அனுபவத்தின் அச்சான பிம்பத்தையோ, சேதாரம் இல்லாமல் வெளியிடுவது எளிதன்று. இருப்பினும், இலக்கிய கர்த்தா, தனது படைப்பின் அழகையும் அருமையையும், தத்துவத்தையும் படிப்பவர்கள் மனத்திலும் எண்ணத்திலும், மீண்டும் உருவெடுக்கச் செய்ய முடியுமானால் அவன் எழுத்துக்கள் சிரஞ்சீவித்துவம் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற அமர இலக்கியத்தில் ஊறித் திளைக்கும் போது பெருக்கெடுக்கும் இன்பத்தை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

**முதல் வகை:**

நமக்கு இதுவரை தெரியாத புதுமைகளை நாம் புரிந்து கொள்ளும் வகையிலும் அவை உண்மைதான் என்று உணர்ந்து, ஒப்பும் வகையிலும், ஓர் எழுத்தாளன் சொல்லில் வடிக்கும்பொழுது படிப்பவனின் உள்ளம் துள்ளிக்குதிக்கின்றது. ஆகாய வெளியை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் விஞ்ஞானி ஒவன் தன் கண் வீச்சுக்குள் திடீரென ஒரு புதுக்கோள் தென்பட்டுக்கடக்கின்ற நிகழ்ச்சியைக்கண்டுவிட்டால் எத்தகைய

எக்களிப்புக் கொள்வானோ அதைப்போன்றது, பேரிலக்கியம் ஒன்றைப் புதிதாகப் படிக்கின்றவனது உள்ள நிலை என்று கூறுகிறான் ஆங்கிலக் கவிஞன் கீட்ஸ். ஹோமரின் இலியத், வால்மீகியின் இராமாயணம், கம்பனின் இராம காதை ஆகிய உலகப் பேரிலக்கியங்களைப் படிக்கும்பொழுது இத்தகைய புதிய இன்பம் பிறக்கின்றது.

**இரண்டாவது வகை :**

சில உண்மைகள் நமக்கு முன்பே தெரிந்தவைதான். ஆனால் கலைஞன் அவற்றைப் புதுமாதிரியாகவும், புதுப்பாணியிலும், தெளிவாகவும், அழகாகவும், சொல்லிவிடும்பொழுது, அதனைப் படிக்கும் வாசனுக்கு ஏற்படும் இன்பம் இந்த வகையைச் சேர்ந்தது. இதனை இனம் கண்டு கொள்ளும் இன்பம் என்று கூறலாம் ஆ! இதை இப்படிச் சொல்லி விட்டானே! என்ற சகோதர பாவத்தில் படிப்பவனும் படைப்பவனும் ஒன்றிவிடும் நிலைதான் இது. 'இதை இப்படிச் சொல்லலாம் என்று எனக்கு இதுவரை தெரியாமற் போயிற்றே', என்று வியப்பெய்துகின்ற மனோநிலையும் இதுதான்.

உதாரணமாக—

சுட்டும் விழிச்சுடர்தான் — கண்ணம்மா
சூரிய சந்திரரோ
வட்டக்கரிய விழி — கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ
பட்டுக் கருநீலப் புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடுநிசியில் — தெரியும்
நட்சத்திரங்களடீ !

என்னும் பாரதியின் பாடலைப் படிக்கும்பொழுது வாசகனின் உள்ளத்தில் இதுபோன்ற இன்பம் பிறக்கின்றதல்லவா ? எத்தனை முறை இதைப் பார்த்திருக்கின்றோம். இதை ஒரு புதுக்கோணத்தில் நோக்குவதால் ஏற்படும் புது அனுபவமும், அதனால் ஏற்படும் மனக்கிளர்ச்சியும், சொல்லில் அடங்கா.

'தங்க முருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதயோ ?'

என்று காலைக் கதிரவனின் பேரழகை பாரதி பாடுகிறான். நாம் தினமும் பார்க்கும் காட்சிதான். ஆனால் கவி வாக்கில் அது உயிரோவியமாக மாறி வருகிறது. பழைய பொருள்கள்

தான் புதிய பொலிவு பெறுகின்றன. கலைஞனின் கற்பனை யினால் புதிய பார்வையினால் மெருகு ஏற்றப்படுகின்றன,

**மூன்றாவது வகை :**

உலகம் தொடங்கிய நாள் முதல், உலகின் ஒரு கோடியில் இருந்து மறுகோடி வரை வாழ்ந்து, அனுபவித்து, மடிந்துபோன எண்ணற்ற உள்ளங்களின் ஆசைகள், கனவுகள், துன்ப-துயரங்கள், சாதனைகள் ஆகியவற்றையெல்லாம் ஒவ்வொரு மனிதனும் தானே அறிவதும், உணர்வதும், அனுபவிப்பதும், ஒரு பிறப்பில் இயலக் கூடியனவையா? இல்லை, அல்லவா? ஆனால், பல்வேறு காலங்களிலும், இடங்களிலும் வாழ்ந்த மேதைகள் படைத்த சாகா வரம் பெற்ற இலக்கியங் களைப் படிக்கின்ற ஒருவன் ஒருசில மணி நேரத்துக்குள், அவற்றைத்தானே நேரில் கண்டு அனுபவித்தவனைப்போல் ஆகின்றான். மரணத்தின் வாயிலில் இருக்கும் ஒருவனின் மனத்திரையிலே அவனது கடந்தகால வாழ்க்கை படமாக ஓடித் தெரியும் என்று சொல்வார்களே அதேபோல, வாசகனின் உள்ளத்திரையிலும், இலக்கிய கர்த்தாவின் வாழ்க்கை அனுபவங்கள் யாவும், ஒரு சுருங்கிய கால அளவிலே சலனப் படமாக ஓடுகின்றன. இலக்கியம் ஒன்றினால்தான் இதைச் சாதிக்க முடியும். இவ்வாறு, காலத்தை கடக்கின்ற, காலத்தை அடக்கிச் சுருட்டி ஒரு சிமிழியில் திணிக்கின்ற செப்பிடு வித்தையை இறைவன் ஒருவனே செய்ய வல்லவன் என்பர். ஆனால், கலைஞனும், இத்துறையில் வெற்றி பெறுகிறான். காரணம், கலைஞன் உள்ளத்தில் கடவுட் பொறி ஒன்று கனன்று கொண்டிருக்கின்றதல்லவா? வாசகன் தான் என்ன? கலைஞனின் உள்ளத்தோடு உளம் ஒன்றிப் படிக்கும்பொழுதே, அவன் ஈந்த கற்பனைச் சிறகைக் கட்டிக்கொண்டு, இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்னும் கால வரம்புகளைக் கடந்து, கலைஞன் கண்ட காட்சிகளை யெல்லாம் தானும் கண்டு இன்புறு கின்றான் அல்லவா? இவ்வாறு, கலைஞனும் வாசகனும் இணைந்து காலத்தை வெல்லுகின்ற ஜாலத்தை நிகழ்த்து கின்றார்கள். டால்ஸ்டாயின் 'போரும் காதலும்'; ஷேக்ஸ் பியரின் நாடகங்கள், மில்டனின் 'சுவர்க்க நீக்கம்' வியாச முனிவரின் 'மஹாபாரதம்', காளிதாசரின் 'சாகுந்தலம்', தாந்தேயின் 'டிவைன் காமெடி', செர்வான்டீஸின் 'டான் குவிக் சாட்' மற்றும் இளங்கோவடிகளின் 'சிலப்பதிகாரம்' சேக்கிழாரின் 'பெரிய புராணம்', ஆகிய பேரிலக்கியங்கள் இந்த வகை இன்பத்தைக் கொடுப்பன.

**நான்காவது வகை :**

எது பேரழகு வாய்ந்ததோ, அதுவே பேருண்மையும், பேருண்மையெல்லாம் பேரழகு வாய்ந்ததும் ஆகுமென்று ஜான் கீட்ஸ் என்னும் ஆங்கிலக் கவிஞர் கூறுவார். பல்லாயிரம் ஆண்டுகட்டு முன்னர் வேதரிஷிகள் இயற்கைச் சூழலில் மோனத் தவமிருந்து, தம் உள்ளத்தில் முகிழ்த்த கருத்துக் களைச் சந்த நயத்தோடு, என்றும் அழியாத வடிவிலே இசைத்திருக்கின்றார்கள். அவை, அன்றுபோலின்றும், மனித வாழ்க்கையின் புரியாத புதிர்களுக்குச் சரியான விடைகளைத் தேடித்தேடி அலையும் பெரும் சிந்தனையாளர்களுக்கு வழி காட்டும் ஒளிவிளக்குகளாக அமைந்திருக்கின்றன. அவற்றின் பேரழகு இதுபோன்ற சிந்தனயாளர்களுக்கு மட்டுமே புலப்படுவதாகும்.

கலைகள் எல்லாமே வடிவினால் அழகு பெறுவன. இந்தக் கோணத்திலிருந்து பார்க்கின்ற பொழுது, காணும் பொருள்களில் எல்லாம் ஆழ்ந்து கிடக்கும் வடிவமைதியை எழுத்தாளன் வெளியிடும் பொழுது படிப்பவன் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் அழகுணர்ச்சி தட்டி எழுப்பப்படுகின்றது. இவ்வாறே மனிதனின் உயரிய பண்புகளில் அழகு காணப்படலாம். அசாதாரணமான மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள், புராண, இதிகாச, காவிய நாயகர்களின் வீரதீரச் செயல்கள் படிப்போரின் உள்ளத்தைக் கனிவித்து இன்பம் தருகின்றன. அறத்தை நிலை நிறுத்தும் அமர வாழ்க்கைச் சித்திரங்களில் இவ்வழகைக் காண முடியும்.

எல்லையற்ற இன்னல்களுக்கு ஆளான போதும் தருமத்தில் அசையாத நம்பிக்கையொடு இறுதிவரை கடமையாற்றி வந்த தருமபுத்திரன் வாழ்க்கையும், அவனன்றி ஓரணுவும் அசையா தென்ற பேருண்மையை நிலை நிறுத்த முனைந்ததால் பெற்ற தந்தையாலேயே பெருந்துன்பத்துக்காளான பிரகலாதன் சரித்திரமும், 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்', என்ற நாவுக்கரசரின் அஞ்சா நெஞ்சத்தினைப் புலப்படுத்தும் வீர வரலாறும் படிக்கின்றபொழுது உள்ளத்தில் தோன்றுகின்ற மனநிறைவு ஒருவகை இன்பம் அல்லவா ?

'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா எங்கள் இறைவா' என்று வியந்து கூவுகின்றான் மகாகவி பாரதி.

(தொடர்ச்சி 264ம் பக்கம் பார்க்க)

# சிலப்பதிகாரத்தில் அறமுழக்கம்

## முன்னுரை :

தமிழிலக்கிய உலகில் கற்றார் எல்லாரும் உச்சி மேல் வைத்துப் போற்றும் நூல்களுள் வள்ளுவர், இளங்கோ, கம்பன் என்னும் முப்பெரும் கவிஞர்கள் தந்த செல்வங்கள் தலை சிறந்து முடிமணியாய்த் திகழ்கின்றன. இந்த உண்மை பலராலும் அறியப்பட்ட ஒன்றாயினும் நமக்குத் தெள்ளத்தெளிய எடுத்துரைத்தவர் தேசியகவி பாரதியாரேயாவார்.

> " யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
> வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்
> பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை
> உண்மை வெறும் புகழ்ச்சியில்லை "

என்று பூவுலகிலேயே கம்பனும், வள்ளளுவரும். இளங்கோவும் முதன்மை இடத்தைப் பெற்று விளங்கும் முச்சுடர்களாவர் என்பதனை அறுதியிட்டுள்ளது. அவர்தம் கணிப்பு முற்றிலும் பொருத்தமானது என்பதனை இந்நூல்களை ஆராய்ந்த அறிஞர் பெருமக்களும் பல்வேறு வகையில் நிலைநாட்டியுள்ளனர்.

இவ்வாறு முடிமணியணியாய்த் திகழ்கின்ற மூவகை நூல் களிலும் தலை சிறந்து விளங்குவது சிலப்பதிகாரமாகும். இதில் இயல், இசை, நாடகம் என்று கூறப்படும் முத்தமிழ்க் கூறுகளும் இடம்பெற்றுள்ளது. மேலும் " தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதேறும் சிலப்பதிகாரம் என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறியதால் தேன்நிகர் காவியம் இது என்பது தெளி வாகின்றது. இன்னோரன்ன பல புகழாரங்களைச் சூடிக்கொண்டு ஏற்றமிகு புகழுடன் விளங்குகின்ற சிலப்பதிகாரத்தில் அறம் முழக்கம் செய்கின்ற விதத்தைச் சிறிது புலப்படுத்துவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

---

263-ம் பக்கத் தொடர்ச்சி

அவ்வின்பங்கள் எல்லாவற்றினுள்ளும் தலையாயதும் நிரந்தரமானதும் புனிதமானதும் உயர்ந்த இலக்கியம் தரும் இன்பமேயாம். கற்பனை வளமும் கருத்தாழமும் சொல்லாட்சியும் ஒருங்கே அமையப் பெற்ற உயர்ந்த இலக்கிய மேதைகளுடன் பண்பட்ட உள்ளமும், ஒத்த கற்பனைத் திறனும் பகுத்தறிந்து திறனாயும் அறிவும் நிறைந்த வாசகன் இணைந்து இயங்கும் பொழுது பிறக்கின்ற இன்பத்துக்கு ஈடாக உலகில் எதைத்தான் சொல்ல முடியும் ?

## சிலம்பின் செய்தி :

காவிரி கடலொடு கலக்கும் புகார் நகரில் வணிகக் குடியில் செல்வமகளாகப் பிறந்த கண்ணகி இறுதியில் மன்னவரும், விண்ணவரும் போற்றும் தெய்வநிலைக்கு உயர்ந்த வரலாற்றினை வண்ணமுற வடித்துக் காட்டுவது சிலப்பதிகாரத்தின் செய்தியாகும். கற்புக் கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றினைப் பரக்கக் கூறும் சிலப்பதிகாரம் முடியுடைய மன்னர் மூவரின் செய்திகளையும், சிறப்பாகச் சேரன் செங்குட்டுவனின் இணையற்ற வீரத்தினையும் சிறக்க மொழிகின்றது. பல்வேறு சுவைகள் பாங்குறக் கலந்து வந்து சிலப்பதிகாரம் ஓர் உயரிய காப்பியம் என்னும் உண்மைக்குச் சான்றாக விளங்குகின்றது. காதலன் இனிய செல்வியும் ஆண்டு உண்டு. வீரத்தின் விம்மிதமும் அங்கு உண்டு. இன்பத்தின் சிறப்பும் இனிமையாக எடுத்து விளக்கப்படுகின்றது. அதே நேரத்தில் அவலத்தின் ஆழமும் அங்கு புலனாகின்றது. இவற்றோடு சிலப்பதிகாரத்தில் சிறுபரல்களாக அறிவுரைக் கருத்துகளும், அறிவுரை முழக்கங்களும், நிலையாமை உணர்வுகளும், வினைபற்றிய கோட்பாடுகளும், கற்பின் திண்மையும், அரசியல் சிறப்பும், தவத்தின் மேன்மையும், வாழ்த்துக்களும் ஆங்காங்கே இழையோடி, கற்போரைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்துகின்றன. இவ்வகையில் இலங்கும் சமுதாயக் காப்பியமாகிய சிலம்பு எல்லாக் கடவுளரையும் போற்றுகிறது. எங்கும் உளன் ஒருவன் என்று அஞ்சியும் அன்பு பட்டும் நேர்மையில் நின்று தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின், பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின் ’ என்று அறிவுரை வழங்குகிறது. இவ்வாறு அறிவுரை கூறுகின்ற சிலப்பதிகாரம் பெறும் சிக்கல்களுக்கு இடந்தரக்கூடிய காப்பியமாகத் திகழ்கின்றது ஒரு நாட்டுக் குடும்பத்திற்கு அடுத்த நாட்டு வேந்தன் கொலை தண்டனையால் துன்பம் விளைத்த பகுதி, ஒரு நாட்டுத் தலை நகரத்தை எரித்தவளுக்கு அடுத்த நாட்டு வேந்தன் கோயில் எழுப்பிய பகுதி, வணிகன் ஒருவனைப் பொன் தொழிலாளி ஒருவன் கொல்லுமாறு சூழ்ச்சி செய்த பகுதி முதலியவை பல பூசல்களையும் பகைகளையும் விளைக்க வல்லவை. ஆனால் இளங்கோவடிகள் கலைச்சுவைகருதி நடுநிலைமையைக் கைவிடாமல், நாட்டு மக்களிடையே அதற்குப் பல வகையிலும் எதிர்ப்புகள் ஏற்படாமல் இருக்கும் வண்ணம் உண்மையையும், நடுநிலைமையையும் போற்றி அதே நேரத்தில் கலைச்சுவையும் குன்றாத வண்ணம் காப்பியத்தை

இயற்றியுள்ளார். அவர் காப்பியத்தின் உண்மை ஆற்றல் மிக்கது; காலம் கடந்து வாழும் வலிமை மிக்கது; கலைச்சுவை கவர்ச்சி மிக்கது, கற்பவரை அவ்வப்போது புகழ்விக்க வல்லது. ஆயினும் உண்மையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் கலைக்கு இல்லை என்பதை மிக நுட்பமாகக் கூறியுள்ள பாங்கு போற்றுதற்குரியது.

## சிறந்த இலக்கியம் :

சிறந்த இலக்கியம் என்பது வாழ்க்கையின் இன்றியமையாத பேருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். உணர்ச்சி, கற்பனை, வடிவம், சொல்லாட்சி, பொருள் நயம் இன்னோரன்னவை, இலக்கியத்திற்குரிய பண்புகளாகும். ஓர் இலக்கியத்தில் இத்தகைய கூறுகள் சிறந்த முறையில் அமைந்திருப்பினும், எக்காலத்திலும், எச்சூழலிலும் மாறா உண்மையாக நிலைபெற்று, மனித சமுதாயத்தை நன்னெறிப்படுத்தி உயர்த்த வல்ல வாழ்க்கையின் பேருண்மைகள் அதன்கண் ஊடுருவி இல்லையானால் அது சிறந்த இலக்கிய மாகாது. எனவே ஒரு பேரிலக்கியத்தின் கருத்துக்கள் அனைத்தும் மனித வாழ்க்கையின் மாறா உண்மைகளின் அடித்தளத்தினின்றும் எழுந்தவையாகும். வாழ்க்கையின் உள்ளுயிரையும் (Inner spirts) அகவிதிகளையும் உண்மையாக அறிவுறுத்தும் இலக்கியமே பேரிலக்கியமாகப் போற்றப் பெறும். இவ்வகையில், தமிழ்மொழியின் தலைசிறந்த காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில், உலகமாந்தர் பண்பட்டு உயர்தற்குறிய பேருண்மைகள் அடித்தளத்தில் வேரூன்றி நின்று, நெஞ்சை-சிலப்பதிகாரமாக உயர்த்துகிறது.

## இல்லறம் :

மக்கள் உள்ளத்தை நாளடைவில் விரிவடையச்செய்து பக்குவப்படுத்துகின்ற தன்மை இல்லறத்திற்கே உரியது. இல்லறத்தில் ஈடுபடுகின்ற தலைவனும் தலைவியும் அன்பால் உள்ளம் ஒன்றிச் சமுதாயத்தில் பலருக்கும் பயனுடையவர் களாய்த் திகழ்தல் வேண்டும். இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் இத்தகைய இல்லறத்தை வலியுறுத்தி-யுள்ளார். சிலப்பதிகாரத்தின் கதை கதைத் தலைவர்களாகிய கோவலன் கண்ணகியரின் திருமணத்தில் தொடங்குகிறது. திருமணமாகிச் சில நாட்களுக்குள்ளாகவே இருவரும் தனியாக இல்லறம் நடத்தலாயினர். சுற்றத்தினரைப் புரத்தல் அறவோர் வறிஞர் இன்னோரன்னவரை ஓம்புதல் விருந்தினரைப் பேணுதல் ஆகிய இவற்றுடன் கூடிய பெருமைக்குரிய இல்

வாழ்க்கையைக் கோவலனும், கண்ணகியும் சிறப்புற நடத்தும் தன்மையைப் பெற்றோர்கள் காணுவதற்கு விழைந்தனர். எனவே பணியாளரொடு அவர்களைத் தனியே வாழச் செய்தனர். இதனை இளங்கோவடிகள்

"மறப்பரும் கேண்மையொடு அறப்பரி சாரமும்
விருந்துபுறந் தருஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமொடு ஒருதனி புணர்க்க"

என்று தம் காப்பியத்தில் எழுதிக் காட்டுகிறார்.

கோவலன் கண்ணகியொடு சில ஆண்டுகள் இல்லறம் நடத்தினான். பின்பு கலைச்செல்வி மாதவி என்னும் மங்கைபால் தன் மனத்தைப் பறிகொடுத்துக் கண்ணகியைப் பிரிந்து கலையரசியாகிய மாதவியை அடைந்து வாழ்ந்தான். இதனால் கோவலனுடைய இல்லற வாழ்க்கை சிதைவுற்றது. இத் தவற்றின் விளைவாகப் பின்னர் கோவலன் பல துன்பங்களுக்கு ஆட்பட்டான். அதனால் அவன் மனைவி கற்புக்கரசி கண்ணகியும் துன்பமென்னும் வெந்தழலால் வெந்து சாம்பினாள். தன் இல்லறத்தைச் செம்மையாக நடத்தத் தவறியதன் விளைவாகவே கோவலன் மதுரையில் கொலையுண்டான் என்று கூட கூறலாம். மதுரையில் மாதரி இல்லத்தில் கோவலனும், கண்ணகியும் தங்கியிருந்தனர். கண்ணகி உணவினைச் சமைத்துக் கோவலனுக்குப் படைத்நாள். கோவலன் உணவை உண்டபின் தன்னால் கண்ணகிக்கு நேர்ந்த துன்பத்தை எண்ணி மனம் நொந்தான்.

அவளை அருகழைத்து "மதுரைக்குப் புறப்படு என்றவுடனே நீ புறப்பட்டுவிட்டாய். நீ புறப்படாமல் இருந்திருக்கக் கூடாதா?" என்று வருந்திக் கோவலன் கூறினான். அப்பொழுது கண்ணகி, தன்னுடைய இல்லறம் அழியவும் கோவலனின் பெற்றோர் மனம் வருந்தவும் கோவலன் மாதவிலய அடைந்து ஒழுகிய தகாத ஒழுக்கத்தை சுட்டிக் காட்டிக் கணவன் சொற்படி நடப்பதுவே தன்னுடைய கடமை என்று கூறினாள்.

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை..."

என்ற இச்சொற்களால் தான் இல்லறம் இழந்த நிலைமையினைக் கண்ணகி உணர்த்தினாள். இல்லறத்தை மேற்கொண்டவர்கள் அறவோர்க்கு வேண்டியன அளித்து உதவுதலும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோராகிய அந்தணரை அன்போடு பாதுகாத்தலும், துறவிகளை எதிர்கொண்டு உதவுதலும் இல்லறத்திற்கே சிறப்பினைத் தந்துதவும் விருந்தோம்பலும் ஆகிய நற்செயல்களைச் செய்தல் வேண்டும் என்று இவ்வடிகள் உணர்த்துகின்றன. இதனிலிருந்து இல்லறத்தின் அறநெறியினை நாம் உணர்கின்றோம். இச்சீரிய நல்லறத்தைச் செய்யத் தவறியதால் கோவலன் அடைந்த துன்பங்களை இளங்கோவடிகள் எடுத்துக்காட்டி, அவற்றின் வாயிலாக சீரும் சிறப்பும் மிக்க இல்லறத்தின் இன்றியாமையை வற்புறுத்திக் கூறுகின்றார்.

**ஈதல் :**

மக்கள் இந்நானிலத்தில் நல்வாழ்வு வாழ்வதற்கு உறுதுணையாய் அமைவது பொருட்செல்வமாகும். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை' என்று வள்ளுவரும்' அப்பொருள் துன்னுங்காலை துன்னாதன இல்லையே என்று திருத்தக்க தேவரும் பொருட் செல்வத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். பொருளினை மக்கள் நல்வழியே நின்று ஈட்டி அதைக் கொண்டு தாமும் நலமுற வாழ்ந்து பிறரையும் இன்பம் உற வாழ வைக்கவேண்டும். ஒருவன் ஈட்டுகிற பொருள்கள் அனைத்தும் அவனுக்கே உரியதென்று கொள்ளுதல் கூடாது. அப்பொருளுக்கு அவன் அறக்காவலனாக இருந்து இல்லோர் துன்பம் தீர அதைக் கொடுத்து உதவுதல் வேண்டும். இதுவே ஈதலாகிய அறம் எனப்படும். இவ்வாறு நல்ல வகையில் பொருளை ஈட்டி இல்லாதவனுக்குக் கொடுத்து உதவி வாழ்கின்றவனுடைய வாழ்க்கையே ஒப்பற்ற வாழ்க்கையாகும். அவ்வாழ்க்கையானது நிலையில்லாத இவ்வுலகத்தில் நிலையான புகழை நிறுத்தி வைக்கவல்லது. இதனையே,

> "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்ற குறட்பாவும் நுண்பொருளாகக் கொண்டு விளங்குகின்றது. இத்தகைய ஈதலாகிய அறம் சிலப்பதிகாரத்தில் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. கண்ணகியின் தந்தையாகிய மாநாயகன் பண்பினை இளங்கோவடிகள் மூன்று சீர்களில் குறித்துக்காட்டுகின்றார்.

'மாகவான் நிகர்வண்கை மாநாய்கன்' என்று அவன் சிறப்பினைக் கூறுகிறார். விண்ணில் தவழும் மேகத்தை ஒத்த வள்ளன்மை பொருந்திய கைகளையுடைய மாநாய்கன், என்பது இதன்பொருளாகும். மாநாய்கன் பல அரிய பண்புகள் உடையவனேனும் அவற்றுள் எல்லாம் தலையாயது மேகத்தைப் போலப் பொருளை வரையாது வழங்கும் வள்ளன்மையே என்பதனை இத்தொடர் குறிக்கிறது. கோவலன் தந்தையாகிய மாசாத்துவான் பெருமையினை "வருந்தி பிறர்காத்தும் மாசாத்துவான்" என்று ஆசிரியர் கூறுகிறார். இதனால் செல்வர்கள் தாம் ஈட்டிய பொருளைத் தமக்கே பயன்படுத்திக் கொள்ளாமல் ஈதலாகிய அறத்தைச்செய்து மனித சமுதாயம் அனைத்தும் பயன்படச் செய்ய வேண்டும் என்பது இளங்கோவடிகள் நோக்கம் என்பது புலனாகிறது.

பத்தினி ஒருத்தி ஒழுக்கம் தவறியவள் என்று பொய்ச் சான்று சொன்ன வறிஞன் வருவனைச் சதுக்க பூதம் தன் கையகப் படுத்திக் கொன்று விட்டதை அவன் தாய் கண்டு உயிர்பதைத்து ஏங்கினாள். அவள் நிலையைக் கோவலன் கண்டு பெரிதும் மனம் இரங்கி, அவனுக்கும் அவனுடைய ஏனைய சுற்றத்தோர்க்கும் பெரும் பொருள் நல்கி அவர்கள் வறுமையை நீக்கிப் பல ஆண்டுகள் புரந்தான்.

"அழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரக்த இல்லோர் செம்மல்"

என்ற இவ்வடிகள் பூதத்தால் புடைத்து உண்ணப்பட்ட மகனின் தாயையும் சுற்றத்தாரையும் கோவலன் பல ஆண்டுகள் புரந்த பாங்கினை விளக்குகின்றன.

இளங்கோவடிகள் கோவலனை இல்லோர் செம்மல் என்று சிந்தையாரப் பாராட்டுகிறார். அவருடைய உட்கருத்து இவ்வுலகிலுள்ள செல்வர்கள் அனைவரும் கோவலனைப்போல் ஏழைகளுக்கு ஈதலறம் செய்து இல்லோர் செம்மலாக விளங்க வேண்டும் என்பதாகும்.

## பிறர்க்கென வாழ்தல் :

இவ்வுலக மாந்தர்கள் தங்கள் அன்பினைப் பெருக்கித் தம் நலத்தை அழித்துப் பிறர் பொருட்டு வாழ்தலை இளங்கோவடிகள்

தம் அரும்பெருங் காப்பியத்தில் பேரறமாகப் போற்றியுள்ளார். பிறர்க்கென வாழும் பெற்றியர் பிற உயிர்களின் நலத்திற்காகத் தம் நல்லுயிரையும் கொடுப்பர். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்று பிறர் நலம் பேணும் பெரியோர்கள் இயல்பைத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

மாதவிக்கும் தனக்கும் பிறந்த மகவுக்கு "மணிமேகலை" எனப் பெயரிட்டு விழாக் கொண்டாடிய பொழுது கோவலன் வந்தவர்கட்கெல்லாம் செம்பொன் வாரி வழங்கினான். இத்தானத்தை பெறும் ஆர்வத்தோடு தளர்ந்த நடையும் முதிர்ந்த வயதுமுடைய ஒரு மறையவன் கோலை ஊன்றிய வண்ணம் நடந்து வந்தான்.

அப்போது மதங்கொண்ட யானை ஒன்று சீற்றமுற்று அவனைப் பற்றிக்கொண்டது. கோவலன் அதனைக் கண்டான். உடனே அவன், யானைமீது பாய்ந்து அம்மறையோனை விடுவித்துப் பிறகு அதன்மீது ஏறி அதனை அடக்கினான். மறையோன் மிகவும் வயது முதிர்ந்தவன் இப்பவோ, பின்னையோ, சற்று நேரத்திலோ அவன் உயிர் உடலை விட்டு ஏகக்கூடியது. ஆனால் கோவலனோ காளைப் பருவத்தினன். இன்னும் நெடுங்காலம் நிலவுலகத்தில் இன்ப வாழ்வு வாழ வேண்டியவன். எனினும் வயது முதிர்ந்த அம்மறையோன் யானையின் கையில் தூக்கிய துன்பநிலையைக் கண்டதும் அவன்பால் பேரிரக்கம் கொண்டு, தன் உயிரைச் சிறிதும் பொருட்படுத்தாது மதயானைமீது பாய்ந்து அதனை அடக்கி மறையோனைக் காப்பாற்றினான். இதனால் கோவலனின் தன்னலமற்ற தன்மையும் பிறர்க்கிரங்கும் பேரருள் திறனும் வெளியாகின்றன. இதுபோலவே பத்தினி ஒருத்திக்கு எதிராகப் பொய்ச் சான்று சொன்ன ஒருவறிஞனைச் சதுக்கப்பூதம் புடைத்துண்ணுதலைக் கோவலன் கண்டு பெரிதும் மனமிரங்கி அவ்வறிஞன் உயிர்க்குப் பதிலாகத் தன்னுடைய உயிரை ஏற்றுக் கொள்ளும்படி அப்பூதத்தை வேண்டினான். ஆனால் அப்பூதம் ஒரு பாவியின் உயிருக்குப் பதிலாக நல்ல உயிரைக் கொண்டு மேற்கதியை இழக்க மாட்டேன் என்று மறுத்துவிட்டது.

"பத்தினியொருத்தி படிற்றுரை எய்த
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்

பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிது சென் றெய்தி
என்னுயிர் கொண்டிங்கு இவனுயிர் தாவென
நன்னெடும் பூதம் நல்கா தாகி
நரகனுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை"

அந்த வறிஞனின் உயிர் போவதைக் கண்டு பேரிரக்கம் கொண்டு அவன் உயிர்க்குப் பதிலாகத் தன்னுயிரையே தியாகம் செய்ய முற்பட்ட கோவலனின் தன்னலமற்ற பெருந்தகையை நினைக்குந்தொறும் நெஞ்சை நெகிழ்விப்பதாக உள்ளது. இந்நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பிறர்க்கென வாழும் பேரறத்தைக் காப்பியத்தைக் கற்போர் நெஞ்சம் கவரும்படி இளங்கோவடிகள் அறிவுறுத்தியுள்ளார்.

## பெண்மை அறம் :

சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதிலும் பெண்மையறம் பொலிந்துதோன்றுகிறது. தன்னுடைய கணவன் கருத்துப்படியே மனையாள் ஒழுகுவதும், அவனுக்கு வேண்டிய பணிகளைச் செய்து இன்புறுத்துவதும், அவனையே தன் வழிபடு தெய்வ மாகக் கொண்டு போற்றுவதும் ஆகிய இவை பாவையர் போற்றற் குரிய அறங்களாக மிளிர்கின்றன கோவலன் கலையரசி மாதவி பால் காதலுற்றுத் தன் மனையாளாகிய கண்ணகியைப் பிரிந்து அவளொடு பல ஆண்டுகள் வாழ்ந்தான் கண்ணகி பெறுதற் கரிய தன் வருத்தத்தைத் தாங்கிக்கொண்டு தன் கணவன் பால் சிறிதளவும் வெறுப்புணர்வு கொள்ளாமல் அவன் பிரிவைத் தாங்கிக்கொண்டிருந்தாள். கணவனின் பிரிவை விட மனை-யாளுக்கு வேறு துன்பம் யாதுளது? கோவலனின் பிரிவோ பல ஆண்டுகள் நீடித்தது என்றாலும் கண்ணகி மிக அமைதியோடு அத்துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு வாழ்ந்தாள்.

## கணவனே வழிபடு தெய்வம் :

கண்ணகி ஒருநாள் இரவில் தீயகனவு கண்டாள். அவளும் அவள் கணவனும் ஒரு பெரிய ஊருக்கு சென்றனர். அவ்வூரிலே அவள் கணவனுக்குப் பழி ஏற்பட்டுப் பெரும் துன்பம் உண்டா யிற்று. கண்ணகி அந்த ஊர் அரசனிடம் சென்று வழக் குரைத்தாள். இறுதியில் அவ்வூர் அழிந்தது. இது கண்ணகி கண்ட கனவு. இக்கனவினை தன்தோழி தேவந்திக்கு

கண்ணகி கூறினாள். அதை கேட்ட தேவந்தி உன் கணவர் உன்னை வெறுக்கவில்லை. பழம் பிறப்பில் உன் கணவனுக்குச் செய்யவேண்டிய நோன்பினை நீ செய்யத் தவறினாய் அதனால் தான் உனக்கு இத்துன்பம் நேரிட்டுள்ளது. காவிரி கடலோடு கலக்கின்ற இடத்தில் நெய்தலங்கானலிடத்தே சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் இரு பொய்கைகள் உள்ளன. அப்பொய்கைகளில் நீராடி மன்மதன் கோயிலை அடைந்து வணங்கினால், இந்நிலவுலகத்தில் பெண்கள் தன் கணவனை பிரியாமல் இன்பவாழ்வு வாழலாம் மறுமையிலும் போக பூமியிற் பிறந்து கணவரோடும் பிரிவின்றி இன்பம் நுகர்வர். நாம் பொய்கையில் சென்று நீராடுவோம் வருக என்று கண்ணகிக்குக் கூறினாள். பல காலம் தன் அருமைக் கணவனைப் பிரிந்திருக்கும் கண்ணகி அவனை மீண்டும் அடைய வேண்டும் என்ற வேட்கையால் உடனே அப்பொய்கைகளில் நீராடச் செல்லவேண்டும். ஆனால் அவள் அப்பொய்கைகளில் நீராடச் செல்ல மறுத்தாள். அத்தகைய பொய்கைகளிலே மூழ்கித் தெய்வந்தொழுதல் எங்கட்குப் பீடு அன்று என்று கண்ணகி தேவேந்திக்குப் பதிலுரைத்தாள். தன் கணவனையன்றி வேறு தெய்வத்தைத் தன் சிந்தனை யாலும் தொடாத கண்ணகி எங்ஙனம் துறை மூழ்கிக் காமக் கடவுளை வணங்குவாள்? எனவே அது தனக்குப் பீடன்று என மறுத்துரைத்தாள். கண்ணகியின் இக்கதை நிகழ்ச்சியிலிருந்து கணவன் தவற்றை மனைவி பொறுத்துக் கொள்வதும் அவனையே தன் வழிபடு தெய்வமாகக் கொள்வதும் பெண்டிற்குரிய அறங்களாகச் சிலம்பில் போற்றப் பெறுகின்றன என்பது தெளிவாகிறது.

**கணவனுக்குத் தொண்டு :**

மனைவி கணவனுக்குத் தொண்டாற்றுவது பெண்களுக்குறிய சிறந்த அறமாகச் சிலம்பு கூறுகிறது. கணவனின் சுவையறிந்து மனைவி தானே உணவு சமைத்து அவனுக்குப் படைப்பது மனைவியின் கடமைகளில் தலையாய சிறந்த அறமாகும் தன் கணவனுடன் சோழ நாட்டை விட்டுக் கண்ணகி பலகாத தூரம் நடந்து மதுரையை அடைந்தாள். அங்கு மாதரி நல்லாளின் இல்லத்தில் இருவரும் தங்கினர் பல காததூரம் நடந்துவந்த களைப்புத் தனக்குத் தீராமலிருந்தும் கண்ணகி தானே தன் கைகளால் காய்கறிகளை அரிந்து அடுப்பு மூட்டி அடிசிலாக்கிக் கோவலனுக்கு அளித்தாள்.

"மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது செங்கண்சேந்தன
கரிபுற அட்டில் கண்டனள் பெயர
வையெரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடமையிற் காதலற் காக்கி"

என்ற இவ்வடிகள் அவள் எவ்வளவு மெய்வருத்தத்தோடு அடிசிலைச் சமைத்தாள் என்பதை நன்கு தெளிவுறுத்துகின்றது. ஒரு சொல் சொல்லியிருந்தால் அவளுக்குத் துணையாக இருந்த மாதிரி மகளாகிய ஐயை, சுவைமிக்க உணவினை அவ்விருவருக்கும் அன்புடன் சமைத்துப் படைத்திருப்பாள். ஆனால் தன் கணவனுக்கு உணவைத் தானே சமைத்துத் தரவேண்டும் என்ற ஆர்வத்தினால் கண்ணகி தன் மெய்வருத்தத்தையும் பாராமல், உணவினைச் சமைத்துப் படைத்தாள். கணவனுக்கு மனைவியே உணவு சமைத்துப் படைப்பது சிறந்த பெண்ணறம் என்பதை இதனால் இளங்கோவடிகள் புலப்படுத்துகின்றார்.

**கணவனுக்காகவே உயிர் வாழ்தல் :**

மனைவி அழகுடன் விளங்குவதும், உயிருடன் வாழ்வதும் தன் கணவனுக்காகவேயாகும் என்ற உண்மை சிலப்பதிகாரத்தில் சிறந்து விளங்குகின்றது. பாண்டியன் அவையில் கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்று நிறுவியதும் மன்னன் தன் தவறுணர்ந்து உயிர்நீத்தான். உடனே அவன் மனைவி, கோப்பெருந்தேவி நடுங்கிக் கீழே வீழ்ந்தாள். அவளைக் கண்ணகி விளித்துத் தான் ஒப்பற்ற கற்புடை மகளிர் பலர் பிறந்த பதியில் பிறந்ததாகக்கூறி அக்கற்புடைய மகளிரின் பெருமையை எடுத்துரைத்தாள். அவர்களுள் ஒருத்தி கடல் கடந்து சென்ற தன் கணவன் வரும்வரை கடற்கரைச் சோலையின் கண் தன் கற்பின் பெருமையால் கல்லுருவமாக இருந்து, அவனுடைய வருகை நோக்கி நின்று, அவன் கலத்தினின்றும் வந்ததும் தன் கல்லுருவை நீத்தாள். மற்றொருத்தியின் கணவன் வெளியூர்ச்சென்றிருந்தான். அயலான் ஒருவன் அழகுமிக்க அவளை தொடர்ந்து நோக்கினான். அதை அவள் உணர்ந்து நிறைமதி போன்ற தன் முகம் குரங்கு முகமாக ஆவதாக என்று எண்ணினாள். உடனே அவள் முகம் அங்ஙனமே ஆயிற்று பின்பு வெளியூர் சென்ற தன் கணவன் திரும்பியதும் குரங்குமுகம் ஒழித்துத் தன் மதிமுகம் மீண்டும் பெற்றாள்

"மணல்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன் வரக் கல்லுருவம் நீத்தாள்"

"......................வேற்றொருவன்.
நீள் நோக்கங் கண்டு நிறைமதி வாள்முகத்தைத்
தானோர் குரக்குமுக மாகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுகம் நீத்த
பழுமணி அல்குற்பூம் பாவை"

என்று சிலம்பு இசைக்கிறது.

கோவலன் கொலையுண்ட பின் மனையாள் கண்ணகி சீற்றமுற்றெழுந்து மதுரையை எரிக்கு இரையாக்கிப் பின் இருத்தலும் நிற்றலுமின்றி நடந்து சென்று நெடுவேள் குன்றம் ஏறிப் பதினான்காம் நாள் இறுதியிலேயே வானவூர்தியில் கோவலனோடு விண்ணுலகு எய்தினாள்.

இவ்வாறாக, கணவனுக்கே வாழும் பெண்ணின் பெருங் கற்பினை இச்சான்றுகள் கொண்டு ஆசிரியர் சிறப்பாகப் புலப் படுத்தியுள்ளார்.

**அரசநீதி :**

மன்னன் தன் குடிமக்களையேயன்றித் தன் நாட்டில் வாழும் ஏனைய உயிரினங்களையும் தன்னுயிர் போல் ஓம்புதல் வேண்டும் என்னும் அரசநீதியை இளங்கோவடிகள் தன் சிலம்பில் அறிவுறுத்துகின்றார். பாண்டிய மன்னனிடம் கண்ணகி ஒரு புறாவின் துன்பத்தைத் தீர்த்தற் பொருட்டுத் தன் உடலையே பருந்துக்கு அளித்த சிபி மன்னனும், கன்றினை இழந்து கண்ணீர் பெருக்கிய பசுவிற்கு முறை செய்யத் தன் அரும் பெறல் செல்வனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதி மன்னனும், ஆட்சிபுரிந்த புகழ்பெற்ற புகார் நகர் தம்பதியென வழக்குரைக்கச் சென்ற கண்ணகி, தன்னைப் பாண்டிய மன்னனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன், அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே ......"

விலங்கு, பறவை ஆகிய இவற்றின் துன்பத்தையும் தமக்குற்ற துன்பம் போல் கருதிச் சோழ மன்னர்கள் அவற்றின் துன்பம் போக்கிப் புரந்த தண்ணளிமிக்க நீதியினை இவ்வடிகள் உணர்த்துகின்றன. தென்னவரின் செங்கோன்மை பொருந்திய ஆட்சியில் கரடிகள் தாம் அகழ்தற்குரிய புற்றினையும் அகழா; புலிகள் தாம் பகைத்தற்குரிய மானினத்தைப் பகைக்கா; பாம்பும், இரைதேடித் திரியும் முதலையும்; இடியும்; ஆகிய இக்கொடியவை யாவும் சார்ந்தவர்க்குத் துன்பம் செய்யா.

" கோள்வல் உளியமுங் கொடும்புற்றகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா
அரவுஞ் சூரும் இறைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு '

விலங்குகளும் ஒன்றையொன்று பகைக்காமலும், பிறருக்குத் துன்பம் செய்யாமலும் இருந்தன எனில் மக்கள் எந்த அளவிற்கு அன்பில் ஒன்றி அமைதியோடு வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பதை நாம் உய்த்துணர்ந்து கொள்ள முடிகிறது. இதன் மூலம் ஒரு நாட்டில் நீதி வழுவா அரசியல் முறை நிலவுமாயின் அதன் கண் அத்தகைய அன்பும் அமைதியும் பண்பும் பலவளனும் நிறையும் என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகின்றார்.

தான் பொற்கொல்லன் சொற்கேட்டு ஆராயாது கோவலனைக் கள்வன் என்று கருதிக் கொலை செய்தது தவறு என்று உணர்ந்ததும் பாண்டிய மன்னன் மனமுடைந்து,

" பொன் செய் கொல்லன் தன்சொற்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங்காவல்
என் முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள் "

என்று கூறி அறியணையினின்றும் கீழே வீழ்ந்து உயிர்நீத்தான் நெஞ்சைத் தொடும் இத்துன்ப நிகழ்ச்சியின் வாயிலாக இளங் கோவடிகள், ஒரு மன்னன் எத்துணையளவு கண்ணும் கருத்து மாக ஆராய்ந்து நீதி வழங்குதல் வேண்டும் என்பதை நன்கு வலியுறுத்தியுள்ளார்.

**துறவறம் :**

மக்கள் இந்நிலவுலகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து முடிவில் உலகத்தின் நிலையாமைத் தன்மையைஉணர்ந்து பற்றற்ற பெரு நிலையை எய்த வேண்டும். தமக்கு நேர்ந்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிறவுயிர்கு எவ்வகையிலும் சிறிதும் துன்பம் செய்யாமையாகிய இவையே பற்றற்ற நிலையை எய் தற்குறிய செந்நெறியாகும். இதுவே தவம் எனப்படும்.

"உற்றநோய் தோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என்பது திருக்குறள். மதுரையில் கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்ததும் அவன் தந்தை மாசாத்துவானும் கண்ணகியின் தந்தை மாநாய்கனும், கோவலனின் காதலியும் கலையரசியுமான மாதவியும், இவ்வுலக நிலையாமையை உணர்ந்து துறவறம் பூண்டனர்.

"கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி
மாபெருந் தானமா வான்பொருள் ஈந்தாங்கு
இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு
அந்தர சாரிகள் ஆறைம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி எய்தவும்"

என்று மாசாத்துவான் துறவு பூண்டதைச்சிலம்பு இசைக்கின்றது. இங்ஙனமே மாநாய்கன் துறவினை,

"கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத்து ஆசீவகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்"

என்ற அடிகள், அவன் ஆசீவகத் துறவியானான் என்பதை உணர்த்துகின்றது. மாதவி தன் நற்றாயை நோக்கி யான் நன்னெறியில் செல்லக் கடவேன் நீ மணிமேகலையை மிக்க துன்பத்தைச் செய்யும் கணிகையர் கோலமேற்கச் செய்யாதே' என்று சொல்லி மணிமேகலையின் மாலையினைக் கூந்தலுடன் களைந்து புண்ணிய தானஞ்செய்து பௌத்த துறவியானாள். இங்ஙனம் காப்பியம் கூறும் இந்நிலையிலிருந்து நிலையாமை உணர்வு பெற்றுத்துறவு பூண்டு பற்றறுத்துப் பிறப்பினை யொழிப்பதே ஆன்மா எய்தற்குரிய பெருநிலை என்பது புலனாகிறது.

மேலும் நூலாசிரியராகிய இளங்கோவடிகள் காவியத்தின் இறுதி வரந்தருங்காதையில் பலவகையில் அறிவுரை கூறி அறமுழக்கம் செய்கின்றார். கவலை துன்பம் என்பவற்றை விட்டொழிக்க வேண்டும். தெய்வம் என்பது ஒன்று உண்டு என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். பொய்யுரைகளையும், புறங்கூறுதலையும் நீக்கிக் கொள்ள வேண்டும் ஊன் உணவைக் கைவிட்டு, தானங்களைச் செய்து உயிர்க்கொலையைச் செய்யாமல் இருக்கவேண்டும். செய்ந்நன்றி மறவாது தீயவர்களின் நட்பினை ஒதுக்கி, பொய்ச்சான்று சொல்லாமல் வாழவேண்டும், பிறன்மனை விரும்புவதை அஞ்சி ஒதுங்கி, துன்பப்படுகின்ற உயிர்களைக் காத்து உதவ வேண்டுவது இன்றியமையாத சிறந்த அறமாகும். பழிச்செயல் களை நீங்கி, கள்ளுண்ணலையும், களவாடும் எண்ணத்தையும் மறந்து, பயனில்லாதவற்றைப் பேசிப்பொழுதைக் கழிக்கும் கூட்டத்தை விட்டு விலகுதல் வேண்டும் என்பது போன்ற அறிவுரைகள் ஆசிரியர் காப்பியத்தினின்றும் வெளிப்படுத்திக், இவ்வுலக மக்களின் நலனுக்காகக் கூறுகின்றார் இதனை,

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்யுமின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீ நட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருள் மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறன்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுஞ் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்"

என்ற காப்பியத்தின் அடிகள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அறுவகை இலக்கணத்தில் எழுத்திலக்கணக் கோட்பாடுகள்

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி
விரிவுரையாளர்
அறிவியல் தமிழ்த் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

வீரசோழிய இலக்கணமே முதன் முதலில் தோன்றிய ஐந்திலக்கண நூலாகும். இதனை,

"நாமே வெழுத்துச்சொல் நற்பொருள் யாப்பலங்
காரமெனும்
பாமேவு பஞ்ச வதிகார மாம்பரப்பைச் சுருக்கி"

என்ற அந்நூற்பாயிரத் தொடரால் அறியலாம். இம்மரபை யொட்டியேதான் நன்னூலும் ஐந்திலக்கணப் பகுப்பைக் கொண்டிருந்தது என்பது அந்நூலின் தற்சிறப்புப் பாயிரத் தொடரால் "அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர" என்பதால், அறியக்கிடக்கின்றது. இவற்றைப் பின்பற்றியே இலக்கண விளக்கம் 'ஐந்து இயலும்' என்றும், முத்துவீரியம், "எழுத்தொடு சொற்பொருள் அணியாப் பைந்தும் எளிதிற் புலப்பட' என்றும், சுவாமிநாதம், "புகுந்த தமிழியல் ஐந்தும்" என்றும், தொன்னூல் விளக்கம் "மேவிய ஐம்பொருள்" (பொதுப்பாயிரம்), நன்னூல் ஆய்ந்தோர் நவின்ற ஐம்பொருள்" (சிறப்புப் பாயிரம்), என்றும் ஐந்திலக்கண நெறியில் இலக்கணம் படைத்துள்ளமை புலனாகின்றது.

## அறுவகை இலக்கணம் — பொது அமைப்பு :

தொன்றுதொட்டுவந்த ஐந்திலக்கண மரபோடு 'புலமை' என்ற ஒன்றையும் கூட்டி இலக்கணப் பகுப்பை அறுவகை யாக்கிக் காட்டியவர் தண்டபாணி சுவாமிகள். இதனை அவரே.

"எழுத்துச் சொற்பொருள் யாப்பணி எனத்திகழ்
இவற்றுடன் இவைதம்மாற்
பழுத்து மாமணம் கமழ்தரு புலமையும்
பகர்வது குறித்துள்ளேன்" (சிறப்புப் பாயிரம்)

என்று கூறுவர். இந்நூலுக்கு முகவுரை எழுதிய திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்கள்

> "அருண்மிகு சுவாமிகள் வழங்கிய அறுவகை இலக்கணம் பல காலமாகத் தமிழில் வளர்ந்து பெருகி வந்துள்ள இலக்கண மரபுகளை அப்படியே வழிமொழிந்து கூறுவதன்று. முன்னையோர் கூறாத புதுமரபுகள் பலவற்றைத் தம் அறிவாற்றலாற் கண்டு சுவாமிகள் இந்நூல் வழி அமைத்துள்ளார் புதிய இலக்கண மரபுகளைத் தெரிவிக்கச் சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து அமைத்தது போல இந்த அறுவகை இலக்கணமும் புது மரபுகளைப் போற்றியுரைக்கும் ஒரு புதுநூலேயாகும் ... ... புது மரபுகளைத் தொகுத்துரைக்கும் இந்த நூல் முதல் நூல் என்னும் தகுதி படைத்ததாகிறது"

என்று கூறுவர்.

இந்நூல் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், புலமையிலக்கணம் என்று இலக்கணம் என்ற பெயரால், ஆறு பெரும் பிரிவுகளையுடையதாயுள்ளது. இவற்றின் உட்பிரிவுகள் இயல்பு என்றும் நிலை என்றும் பெயரிடப்பெற்று அமைந்துள்ளன. அவற்றுள் நிலை என்று மூன்று உட்பிரிவுகளும் ஏனையவை இயல்பு என்றும் பெயரிடப்பெற்றுள்ளன.

## அமைப்பில் தெளிவு :

நூலில் பொது அமைப்பைப் பொறுத்தவரை தெளிவாகவே அமைக்கப்பெற்றுள்ளது. 'இன்னதைச் சொல்லப்போகின்றேன்' என்று இயல் தொடக்கத்திலும், 'இன்னதைச் சொல்லி முடித்தேன்; அதற்குப்பின் இன்னதைச் சொல்லப் புகுகின்றேன்' என்று இயல் முடிவிலும் கூறும் தன்மை காணப்படுகின்றது.

இதுகாறும் காணப்படுகின்ற இலக்கண நூல்கள் அனைத்தும் விதிவகுக்கும் நூற்பாக்களையே கூறுகின்றன. விதிகளுக்கேற்ற எடுத்துக்காட்டுகள் அவற்றுள் கூறப்பெறு-வதில்லை; உரையாசிரியர்களால்தாம் கூறப்படுகின்றன. யாப்பருங்கலக்காரிகையில் இரு காரிகைகள் மட்டுமே

விதிகளோடு எடுத்துக்காட்டுகளைத் தருவனவாகக் காணப் படுகின்றன.

" குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினும் நிறைந்தொற் றடுப்பினும்
நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழி வெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று
வேண்டுவரே " (காரிகை 5)

" நாமாண் புரைத்த வகைச்சீர்க் குதாரண நாண்மலரே "
(காரிகை 7)

இத்தகைய அமைப்பு முறையை நூல் முழுமைக்கும் பொருந்தும் இடங்களில் மேற்கொண்டுள்ளார் தண்டபாணி சுவாமிகள்.

" இகரம் அணித்துஆம் பொருளினைச் சுட்டி
உடைமை காட்டும் கடைநிலையாகும்
இப்பணம் கண்ணி எனுமிவை உதாரணம் "(எழுத்து.105)

" இடுகுறி காரணம் எனுமிரு வகைபெயர்
வேலெனல் வேல னெனல்உதா ரணமே " (சொல். 28)

போன்ற நூற்பாக்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இத்தகைய முறை இலக்கணம் பயில்வாரின் எளிமை கருதி அமைக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. இம்முறை இந்நூற்கே உரிய சிறப்புமுறையாகக் காணப்படுதல் இந்நூலின் தனித் தன்மையைக் காட்டவல்லதாய் அமைகின்றது.

## எழுத்துக்களின் வடிவம் :

இலக்கண நூல்கள் பலவும் எழுத்திலக்கணம் உணர்த்தும் முறையில் வேறுபடுகின்றன. சில இலக்கண நூல்கள் எழுத்திலக்கணம் இத்துணை வகையால் ஆராயப்படும் என்ற வரையறையைக் கூறாமல் தாம் பகுத்துக் கொண்ட இயல் முறைக்கேற்ப அவ்விலக்கணத்தை உணர்த்துகின்றன (தொல்காப்பியம், நேமிநாதம்). சில நூல்கள் வரையறையையும் கூறித் தமது இயல் பகுப்பினுள் அவற்றை அடக்கிக் காட்டியுள்ளன (நன்னூல், சுவாமிநாதம்). அவ்வகையில் எழுத்திலக்கணம் உணர்த்தப்படும் முறையைப் பாராது, ஏற்ற இயல் பகுப்புக்களைக் கொண்டு இலக்கணத்தை விளக்கும் நூலாக

முத்துவீரியம், அறுவகை இலக்கணம் போன்றவை காணப் படுகின்றன. எழுத்ததிகாரத்தை மூன்று பிரிவுகளாகக் கொண்டு இலக்கணம் சொல்லுகின்ற தன்மையைப் பின் வந்த இலக்கண நூல்களிடத்தே காணமுடிகின்றது. தொன்னூல் விளக்கம் (எழுத்தின் தோற்றம், வகுப்பு, விகாரம்), சுவாமிநாதம் (எழுத்தாக்க மரபு, பத மரபு, புணர்ச்சி மரபு), முத்துவீரியம் (எழுத்தியல், மொழியியல், புணரியல்), அறுவகை இலக்கணம் (உரு ஓசையியல்பு, நிலையியல்பு, புணர்ச்சியியல்பு) போன்ற இலக்கண நூல்கள் முப்பகுப்பையுடையனவாக அமைகின்றன.

இவ்வாறு மூன்றியல்களையுடைய எழுத்ததிகார இலக்கணப் பகுப்புகளில் அறுவகை இலக்கணப் பகுப்பு சிறப்புடையதாக அமைகின்றது. அதன் முதல் இயலான உருவோசையியல்பு எழுத்துகளின் வரி வடிவத்தையும் (Graphic representation) ஒலி வடிவத்தையும், (Phonetic representation) ஒரு சேரக்கூறும் பகுதியாக அமைகின்றது. இதுவரை வந்த இலக்கண நூல்கள் எவற்றுள்ளும் எழுத்துகளுக்குரிய வரிவடிவம் சுட்டப் பெற வில்லை என்பது அனைவரும் அறிந்ததே. தொல்காப்பியத்தகள் எழுத்துகளின் வடிவம் கூறப்படவில்லை என்பது உரையாசிரியர் கருத்து. "தன்மையும் வடிவும் ஆசிரியர் தாம் உணருவ ரெனினும் நமக்கு உணர்த்தல் அருமையின்" என்பது இளம்பூரணர் கூற்று. ஆனால் தண்டபாணி சுவாமிகள் எழுத்து களுக்குரிய வரிவடிவத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். எழுத்து என்றாலே வரிவடிவம் உடையது; வரிவடிவம் பெறாத எவ்வகையான ஒலியும் எழுத்தாகமாட்டா என்பது அவரது கருத்தாகும்.

"எழுத்தெனில் வடிவுடன் ஓசையும் உடைத்து அவற்று
உருவியல் பனைத்தும் உணர்வார் சிற்சிலர்"

(அறுவகை எழுத்து. 5)

என்பர் சுவாமிகள். கற்றவர்கள் மட்டுமே அறியத்தக்க இவ்வரிவடிவத்தைக் கூறியுள்ளார். 'க' என்ற ஒலியை நாம் சொல்லும்பொழுது நம் கருத்தில் தோன்றுகிற வரிவடிவும், 'க' என்ற வரிவடிவத்தைப் பார்க்கும்பொழுது நம் உணர்வில் தோன்றுகின்ற ஒலி வடிவும் ஒன்றாகையால் வடிவும் ஓசையும் ஒன்றாயுடையது எழுத்து என்று கூறுகின்றார் சுவாமிகள். அதனால்தான் ஒரு எழுத்து எப்படி எழுதப்படவேண்டும் என்று அதன் வரிவடிவைக் காட்டி அதற்குப் பின் அவ்வரிவடிவிற்குரிய ஒலி வடிவத்தன்மையைச் சுட்டுகிறார் எடுத்துக்காட்டாக,

"கிளிமுகம் போலச் சுழித்துக் கீழ்க்கொணர்ந்து
இடப்பால் நீட்டி மேல்வளைத்து இடைவெளி
அமைதர வலத்தீர்த்து அம்முகம் அடங்க
மேலீர்த்து அம்முறை கீழும் ஈர்த்தல்
அகரக் குறியாம் ஆன் இளங் கன்றிற்கு
இரங்கலில் மூலத்து எழுங்காற் துணைக்கொடு
சிறிது வாய்திறந்து ஒலிக்கும் அக்குறியின்
ஈற்றின் வரைநுனி யிலங்க வலந்தொட்டு
இடம்வரை சுழித்தல் ஆ காரத் தியல்பாம்
அவணெழுந் திருமடங் காம்இதன் தொனியே"

(எழுத்து. 7)

என்ற நூற்பா அகர ஆகாரங்களின் வரிவடிவத்தையும் ஒலி வடிவத்தையும் கூறுகின்றது.

இவ்வாறு, உயிர், உயிர்மெய், மெய் போன்றவற்றின் வரி வடிவங்களைக் கூறுகின்றார். இவர் கூறுகின்ற எழுத்துக்களின் வடிவங்கள் அனைத்தும் இன்றைய அச்சு எழுத்துக்களின் வடி வங்களாகக் காணப்படுகின்றன. இவருடைய காலம் பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாதலானும் அச்சுக்கலை நன்னிலையில் இருந்த காலமாதலானும் அவற்றிற்கேற்ற வாற்றான் அமைந்த வரிவடிவங்களையே சுவாமிகள் கூறுகின்றார்.

வீரமாமுனிவர் (1680-1747) எகர ஒகர உயிர்களின் மேல் இடப்பெற்றிருந்த புள்ளியை நீக்கிக் கோடிட்டுக் காட்டினார். மேலே கோடிடப்பெற்ற தன்மை பிற்காலத்தில் அவ்வெழுத்துக் களின் கீழே இடப்பெறும் தன்மையாயிற்று. இவ்வாறு உயி ரெழுத்துகளுக்குப் புள்ளி வைக்கப்பெற்று எழுதப்பெறும் பண்டைய தன்மையை மாற்றிய வீரமாமுனிவரைச் சுவாமிகள் ஒரு நூற்பாவில் வாழ்த்திக் கூறுகின்றார்.

"எகர ஒகர உயிர்மிசை ஒற்றின்
புள்ளி வைத்தமை பொறாஅ தொருவினர்
வாழி யென்றே வழுத்ததும் யாமே" (எழுத்து 49)

என்பது அந்நூற்பா. மேலும் வரிவடிவத்தைப் பொறுத்தவரை சுவடியில் எழுதப்பெறுவது போன்ற வரிவடிவங்களைப் பிழை வடிவங்கள் என்றே ஒரு நூற்பாவில் (எழுத்து. 48) குறிப்பிடுகின்றார்,

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு

இரா. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., எம்.ஃபில்
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

மெய்கண்டாரின் கருத்துக்கேற்ப,

"... மருதீசன்
தனைக்கருத லேமெய்த் தவம்" 40
"தவத்தினர் யார்க்கு நிலைபர மாம்" 41

என நூலாசிரியர் கூறுவார். மருதீசரை ஆன்மா நினைக்க வேண்டும் அஃதே உண்மைத் தவம் என்கிறார். தவநெறி யேற்படுமாயின் ஐம்புலனின்பங்கள் விலகும், திருவடிப்பேறு கிட்டும். இதனை

"வாழ்த்துமின் வாழ்த்துமின் வாழ்த்துமின் வாழ்த்துமின்
பாழ்த்த பிறப்பறுத்தாள் பான்மைமரு தீசன்செங்
கேழ்த்தன் சரணமலர்க் கீழ்" 42

என உயிர்கள் நிலைபெறத் திருவடியடைய வேண்டிய நோக்கத்தைக் கூறுகின்றார்.

**மூவாசை :**

பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை ஆகியவை உள்ளத்தில் ஓங்கின என்பதை

"அருச்சுனம்பெண் தரையின்மீது தவாவோங்கி
மிகவு முளத் தழுங்கு கின்றேன்" 43

என வருந்திக் கூறுகின்ற நிலையைக் காணலாம். மனம் சிவநெறிக்கண் செல்லுவதை இவை தடுக்கும் தன்மையன.

மாதரின் சொல்லினை நாடுகின்ற கழிகாமச் செயலனாக விளங்கும் இழிவைப்போக்கி மருதிறைவர் அருளவேண்டும் என்பதை,

"வல்லெ னும்முலை மாதரார்
சொல்லை நாடுறு தூர்த்தனேன்
அல்ல னீத்தெனை யாளுவாய்
எல்லின் மெய்ம்மரு தீசனே" 44

என்று வேண்டுகின்ற நிலையைக் காணலாம். பவகாமம் கடந்தார்க்கே சிவகாமம் கிட்டும் என்பது இதன் உட்பொருளாம்.

குடநாகம் போன்றவரான தீயவர் நட்புக்கூடாது; பெண்டிர் கூட்டுறவு தவிர்க்கவேண்டும் என்ற இரு கருத்துக்களை இரட்டுறமொழிவதை,

“குடநாக மனையவர்தங் கூட்டுறவு
தவிர்த்துவரங் கொடுத்தாள் வாயே”[45]

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

மேலும் மனமாவது ஆசையை நாடுகின்றது. அதனால் கொடிய மனமாக மாறுகின்றது; மாயையையே பெரிதென மனங் கருதுகின்றது. இம்மாயை, வெம்மாயையாகத் தோன்றுகின்றது. இக்கருத்தை உட்கருதி,

“.......... வெம்மாயை
ஒட்டியருடென் மருதூ ருத்தமா”[46]

என வேண்டுகின்றார். மாயையை நீக்கும் அருள்செயல் இறைவனாலேயே ஆன்மாக்களுக்குக் கிட்டத்தக்கது என அறியலாம்.

உலகப்பற்றுக்களினால் பழிபாவங்கள் ஏற்படுகின்றன. அவற்றின் தொடர்ச்சியாக நோயும் துன்பங்களும் வருகின்றன. இந்நிலையைக்

“.......... கன்மப்
பழியேற்ற நோயிடும்பை பன்னுவமென் செய்வேன்”[47]

என வருந்திக்கூறுவதைக் காணலாம். உயிர் வருந்துவதற்குரிய காரணம் அதன் கன்ம வினையே என்றும் அவ்வினைக் கணக்குத் தீரும் மட்டும் இன்பதுன்ப நுகர்ச்சி உண்டென்பதும் விளக்கப்படுகின்றன.

### அறியாமை :

அறிவின்மையால் மனமானது குற்றங்களைச் செய்கின்றது. அவற்றால் துன்பங்கள் தொடர்கின்றன. அவை நீங்க இடைமருதீசன் எனும் எழிற்கோபாலனே இன்னருள் செய்வாயாக என்பதை,

"மடமை செறிதருமென் மைம்மனப் பிடிகைமேல்
இடரற மாதோடு மெய்தினா னின்னருள்செய்
திடைமரு தீச னெனுமெழிற்கோ பாலனே" 48

எனும் பாடலடிகள் விளக்குவன. கோபாலன் என்னும் சொல் ஆன்மாக்களைக் காப்பவன் என்னும் பொருளில் ஆளப் பட்டுள்ளது.

புறஇருள் நீக்க ஞாயிற்றின் ஒளிபோதும் எனினும் அக இருள் தீர்க்க அஞ்ஞாயிற்றின் ஒளி உதவாது. அதனை ஞானச் சுடராகத் தோற்றும் இறைவனே நீக்கியருள்வான் என்பதை,

"... ... ... ... ... இருள்
அவித்தைக்கு ஞானச்சுடரா மருதரனார் சரணே" 49

என உறுதியாகக் குறிப்பிடுகின்றார்.

**மலமாயை :**

சிவநெறியாகும் செந்நெறியே உலக உயிர்களை உய்ய வைக்கும் நன்னெறியாம். அந்த நன்னெறியில் நாட்டங் கொண்டு உறுதியாக நின்று இறைபணி செய்யும் எண்ணமுடை யார்க்கே ஆணவம் மாயைகன்மம் ஆகிய மலங்கள் நீங்கும் என்பதை,

"அவனே தானே யாகிய அந்நெறி"
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடுவல்வினை யின்றே" 50

என மெய்கண்டார் கூறியருளுகின்றார். மெய்கண்டாரைப் பின் பற்றி மாயை நீக்கத்தை,

"வன்றீ வினைகள் வலியழிந் தொழியநின்
தன்பூங் கழலினை தகுமெனு ணிறுத்தி
அடிமையின் குறைதீர்த் தருள்செய்நின் னன்பர்பால்
திடமுறச் சேர்ந்துநற் சீருறும் பொருட்டே" 51

என்று திருவிடைமருதூர்க் கலம்பகம் கூறுகின்றது.

பூங்கழலை உள்ளத்தில் நிறுத்தினால் வலிமையான தீவினைகள் ஆற்றலிழந்து ஒழியும்; நல்லடியார் சார்பு உண்டாகும்; அச்சார்பினால் சீர்பெறல் திண்ணம் எனப்படிப் படியான வளர்ச்சி நிலையினைக் கூறுகின்றார்.

**பிறவிப்பகை :**

" சிவமேபொருள்; அவரைச்சேரும் நெறி அன்பே;
நமக்குப்பகை பிறவியே, அருட்கண்ணாலே
சிவத்தைக்கண்டுகளிக்க வேண்டும் "52

என்னும் அருளாளர் வாய்மொழிகள் பிறவி, பகை என்பதனை உணர்த்தும். பாழ்த்த பிறப்பறுப்பதுவே கிடைத்த பிறவியின் பெரும்பயன் என்னும் கருத்ததை உட்கொண்டு திருவிடைமருதூர்க் கலம்பகத்தில்,

" ............ மருதூர்ப் பொருளை யென்னும்
மாமேவு மலர்த்தூவிப் போற்றுவோர்
பிறவிவினை மாற்று வோரே "53

என நூலாசிரியர் நுவல்கின்றார். இப்பிறவியைத் துன்பஞ் சேர்கின்ற பிறவியென்றும், பிறப்பு இறப்புச் சுழல் என்றும் எப்போதும் துன்பமுறும் சீவர் தாபமென்றும் கூறுவதால் அதன் கொடுமையை உணரலாம்.

" சஞ்சலஞ்சேர் பிறப்பிறப்பாஞ் சுழலிலாழ்ந்து
சதாதுன்ப முறுஞ்சீவர் தாபம் "54

எனவரும் பாடலடிகள் அதனை விளக்குவன.

பிறவிவினை மாற்ற வேண்டும் என்பதைப்

" பவவினை மாற்றசனி
பொருவப் புனிதர்க் கருண்மரு
தாவென்பர் புங்கவரே "55

என்று வேண்டுகின்ற பெற்றியைக் காணலாம்.

பிறந்து இறந்து உழலும் பெற்றிமை தவிர்க்க

" நம்புமரு தூரா
வெம்பவநீ தீராய் " 56

என்கிறார் நூலாசிரியர். மற்றீண்டு வாரா நெறியே கற்றீண்டு மெய்ப்பொருள் கண்ட ஞானிகளின் வேண்டுகோளாக அமைவதை உணரலாம்.

**பிறவி நோய் :**

" இன்னும் உள (து) ஐயம் இல (து) உணர்வு ஆங் ஓவாது
மன்னும்பவம் தீர்க்கும் மருந்து " 57

என்ற திருவருட்பயனின் சித்தாந்தக் கருத்தையேற்று இராமசாமிச் செட்டியார் பாக்களில் வடித்துள்ளார். பிறவி நோய் என்பது இதனால் உணர்த்தப்பட்டுள்ளது. புகழ்மருதரின் திருவடியை வாழ்த்தி வணங்குவார்க்குப் பிறவிநோய் தீரும்; கூற்றுவனால் வரும் பழித்துன்பமும் தீரும் என்பதைத்,

"தேயாத சீர்த்தித் திகழ்மருதீ சன்பதத்தை
வாயார வாழ்த்தி வணங்குவோர்க்—கோயாப்
பவநோயுந் தீரும் பகர்கால னார்செய்
அவநோயுந் தீரு மறி" 58

எனவரும் பாடலடிகள் விளக்குகின்றன.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்னும் குறட்பாவில் பரிமேலழகர்,

"பிறவிப் பிணிக்குமருந்து
ஆகலின் நற்றாள்" 59

என்று குறிப்பிட்டது ஈங்கு நினைக்கத்தக்கது.

**பிறவிக்கடல்:**

இப்பிறவியைத் திருவள்ளுவர்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" 60

எனக்கூறியுள்ளார். இக்கருத்தைத் திருவிடைமருதூர்க் கலம்பகப் பாடலில்,

"விடப்பாம் பிறையணிந்த வித்தகநின் றாளாற்
கடப்பாம் பிறவிக்கடல்" 61

என இராமசாமிச் செட்டியார் குறிப்பிடுவதைக் காணலாம். காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலால் பிறவி என்பது பெருங்கடலாயிற்று.

நாள்தோறும் துதிப்பவரின் பிறவித்துயர்க்கடலைக் கடப்பதற்கு வங்கமாக இறைவர் விளங்குகின்றார் என்பதை,

"..........நிதந் தான்றுதிப்பார்
பவத்துய ரக்கடற் கோர்வங்க மாம்" 62

என்று கூறுகின்றார்,

**திருவைந்தெழுந்து :**

ஐந்தாவது நன்னெறியைக் கொடுக்கவல்லது; நமசிவாய என ஓதினால் ஞானமும் கல்வியும் நண்ணும்; அரனடித் திருவடிப் பேரின்பம் கிட்டும். சிவனருள் பெறலாம். இத்திருவைந்கெழுத்தை ஓதவேண்டுமென்பதை "எண்ணுமஞ் செழுத்தே",[63] என்று மெய்கண்டார் கூறியருளுகின்றார். கவம்பகத்தில் திருவைந்தெழுக்குச் சிறப்பை ஊசல் எனுஞ் செய்யுளுறுப்பில், (தொடரும்)

## அடிக்குறிப்புகள்

40. திரு. ம. கலம், பா. 2.
41. மேற்படி., பா. 3.
42. மேற்படி., பா. 34.
43. மேற்படி, பா. 91.
44. மேற்படி., பா. 46.
45. பேற்படி, பா 52.
46. மேற்படி, பா. 12.
47. மேற்படி., பா 50.
48. மேற்படி., பா. 9.
49. மேற்படி., பா. 3.
50. மெய்கண்டார், சிவஞான போதம், சூத்திரம் 10.
51. திரு. ம. கலம்., பா. 1.
52. கிருபானந்தவாரியார், "சைவம்", கோமுக்தீசுவரர் திருக்கோயில் கும்பாபிசேக மலர், ப. 30.
53. திரு. ம கலம், பா 59.
54. மேற்படி., பா. 47.
55. மேற்பா., பா. 54.
56. மேற்படி., பா. 57.
57. உமாபதிதேவநாயனார், கொற்றவல்குடி, திருவருட்பயன் செய். 10.
58. திரு. ம. கலம், பா. 66.
59. பரிமேலழகர் (உ. ஆ), திருக்குறள் 2.
60. திருவள்ளுவர், திருக்குறள்.10
61. திரு. ம. கலம்., பா. 5.
62. மேற்படி., பா 3.
63. மெய்கண்டார், சிவஞானபோதம், சூத்திரம் 10.

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 6 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 00 |
| கபிலர்—நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 00 |
| நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 75 |

### பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

| | | |
|---|---|---|
| எழுத்ததிகாரம் | ரூ. | 40 00 |
| சொல்லதிகாரம் | ரூ. | 45 00 |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ரூ. | 7 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல் - அஞ்சல்

பெறுநர்

திருமிகு ................................................................

அவர்கள்

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி, ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி, தஞ்சாவூர் - 613 009.